KALANILAYAM

தனிப்பிரதி விலை 0-2-6 அணா.

# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

உள் நாடு—வருஷ சந்தா ரூ. 7 0 0
புற நாடு—வருஷ சந்தா ரூ. 9 0 0

கலாநிலயம் :—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol. 8] 1935 ஆம் மார்ச் மீ 7 உ [No. 10

JUL... MADRAS

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 145
2. கம்பராமாயணம் (கிட்கிந்தைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A., B.L. 147
3. நம்மாழ்வார் வைபவம் (7-ம் பத்து, 3-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L. 150
4. ஒத்தெல்லோ (அங்கம் 1. களம் 3.)
Shakespeare's—"Othello" 152
5. வில்லிபாரதம்—(துரியோதனன்)
K. T. விஜயராகவாச்சாரியார் B.A. 154
6. அணியிலக்கணம் (தன்மை அணி) 157
7. சூரியன் - (நக்ஷத்திரசாலை)
E. T. இராஜேஸ்வரி அம்மாள் M.A., L.T. 159
8. வர்த்தமானம் 160

## கலாநிலயம்

### கடவுட் சித்தம் 7.

நம்பொருட்டன்றித் தன் பொருட்டேயும் கடவுளுக்கு ஒரு சித்தம் இருப்பதற்கியலும் எனவுரைத்த அலெக்ஸாண்டரின் சொற்களைத் தழுவி நினைக்குங்கால், எதுவரினும் நாம் இவ்வாழ்க்கையில் செம்மையிலிருந்து வழுவலாகாது என்னும் சிந்தை வலியுறுகின்றது. ஆயினும், கடவுளை இன்னுந் தன் தெய்வத்வத்தை யெய்தவேண்டியவரா யிருக்கின்றார் என்னும் இதனை நம்புவதோ எளியதன்று. அதனாலென்! மற்று, கடவுள் ஒன்று உண்டென்பதையே நம்பமாட்டாமல் மனிதர் கலங்குகின்றனர். உலகத்திற் காணப்படும் நிகழ்ச்சிகள் குறைவும் துன்பமும் தீமையும் உடையனவாய்க் காணப்படுவதால் கடவுளொன்று உண்டானால் உலகம் இவ்வாறு பயமுந் துன்பமுங் கலந்த வெறுப்பே விளைக்கக்கூடியதாக இருக்குமோ என்ற ஐயம் மேலிட்டு மேலிட்டு இறுதியில் 'கடவுளே யில்லை' என்னக் கழறி மறுக்கும்படி நேர்கின்றது. மறுப்போர் மறுத்தாலும், அன்னவர் மனத்திலேயேயும், கடவுள்உண்டுஎன்னும் எண்ணமாத்திரமன்றி, அக்கடவுள் மெய்ந்நெறி நன்மையாம் என்னும் நம்பிக்கையும், வாயாலும் மனத்தாலும் மனிதர் அதனை எத்தனைதான் அயிர்த்துவிவகரித்தாலும், உள்ளுணர்வின் மூலத்தில் ஆழ்ந்துஉறைந்து கிடக்கின்றது என்பது நிச்சயம். மானுட மனத்து இயற்கையின் ஆழத்தில் இறங்கி ஆராய்ந்தவர் இந்த இரகசியத்தை உணரவல்லவராவர். ஆம், "மலைமலையாகச் சந்தேகங்கள் மண்டிவரினும் யான் எள்ளித்தனையேனும் என் அகத்தேயுள்ள ஒரு நம்பிக்கையால் அவைகளை எதிர்ப்புறத்தே நிறுத்தி வைப்பேன்" என்னும் ஓர் வீரத்துணிவு, மனிதராயினோர் ஒவ்வொருவர் அந்தரங்கத்திலும் இரகசியமாக இருந்து தனித்தனி அவர்தமை இவ்வாழ்க்கையில் அமர்த்தி வைக்கின்றது. இவ்வுலகின்கண் நாம் பிறக்க நேர்ந்தவாறும், இனி இறந்தபின் நாம் ஆகுமாறும், அறியமாட்டா இருபெரும் மாயங்களுக்கிடையே, பிணி மூப்பு வறுமை முதல் எண்ணரிய இடுக்கண்களை யேற்றுக்கொண்டு மனிதன் எற்றுக்குத் தன்னுயிரை இனிதெனப்பற்றி இவ்வுலகில் வாழ்கின்றான் என்னும் அக்கேள்வி உலகந் தோன்றிய நாள்முதல் இன்றளவும் இருந்துவருகின்றதேனும் அது இன்னும் உரிய விடையொன்றும் பெற்றுக்கொள்ளவில்லை. எனினும், விடைதேர்ந்தபின்னரே வாழ்வது என்று தாழாமல், அக்கேள்வியுந் தாமுமாகவே தழுவி மனிதர் என்றும் வாழ்ந்துகொண்டு வருகின்றனர். ஆயினும், அவ்வப்போது சிற்சில தத்துவ வித்தகர், மானுடவாழ்க்கையின் ஆதாரம் இதுவென்று அக்கேள்விக்கு விடையாகச் சில முயன்றும் வகுத்துரைத்திருக்கின்றனர். "எது எவ்வாறாயினும், நான் இருந்துதான் தீர்வேன்" என்னும் ஒரு உள்ளத்துறுதி எல்லோர் மனத்திலும் ஒன்றற்கும் மாறாமல் உறைந்திருப்பதாற்றான் இங்கு நாம் இயங்கக்கூடியவராகின்றோம் என்றார் ஷோபன்ஹயூர் (Schopenhauer) என்பவர். இந்த உறுதியை "இருக்கும் இச்சை" (will to be) என்று அழைத்திருக்கின்றார். இவருக்குப் பின் வந்த மற்றொரு

ஜர்மன் வித்தகர் நீட்ச் (Nietzsche) என்பவர், "எது எவ்வாறாயினும், என்னுடைய ஆற்றலைச் செலுத்தி யியற்றுவேன்" என்னும் ஓர் உறுதி எல்லார் உள்ளத்திலும் உறைந்திருக்கிறதென்றும், அதனாற்றான் மனிதர் இயங்கக்கூடியவராகின்றார் என்றும் வாதித்தார். இதனை "இயற்றும் இச்சை" (Will to Power) என்னுஞ் சொல் குறிக்கும். 'இருப்பேன்' என்னும் இச்சையே மானுட வாழ்க்கையின் மூலாதாரமாம் என்று கொள்வது, வேறொன்றும் நமக்கிங்கு வாய்ப்பதற்கு இல்லை யெனும் ஒரு கையறவுற்ற சோர்வையே காட்டும். "ஒன்றிற்கும் உதவாத இவ் வுயிர்வாழ்க்கை" என்றவொரு வெறுப்பின் கசப்பைக் காட்டுகின்றது அவ் விச்சை யென்றும், அஃது உண்மையேனும் பெருமையேனும் அன்றென்றும் வாதித்து நீட்ச், இருப்பது மாத்திரமன்றி, 'இருந்து வெல்லவும் வெல்லுவேன்' என்றவோர் ஊக்கமும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் உறைந்துளது என்று சாதிக்கின்றார். ஷோபன்ஹயூரின் கையறவு இன்றி நீட்ச் என்பவரின் கொள்கையில் காணும் இவ்வூக்கமுங் கிளர்ச்சியும் இவரைப் பல வகைகளில் தகைதடுமாறிப் பேசவைத்தன என்று கருதுவாரும் உளர்.

"இருக்கும் இச்சை," "இயற்றும் இச்சை" என்னும் இவ் விருவகை யிச்சைகளின் தராதரங்கள் எவையாயினும், அவைதாம் மானுட வாழ்க்கையின் அந்தரங்கமான உறுதியோடு கூடிய, மூலங்களாக அமர்வதற்குப் போதா வென்று கருதுகின்றனர் அமரிக்க வித்தகர் வில்லியம் ஜேம்ஸ்என்பவர். "எது எவ்வாறாயினும் நான் இருக்கத்தான் இருப்பேன்," என்ற உறுதியுடைய இச்சைக்கேனும், "எது எவ்வாறாயினும் நான் இருந்து இயற்றத்தான் இயற்றுவேன்" என்னும் உறுதியுடைய இச்சைக்கேனும், பின் நிற்பது, "எது எவ்வாறாயினும் இவ்வாழ்க்கையில் தீதில்லை; அனைத்தும் அந்தத்தில் நன்றாம்; செம்மைசேர் மெய்ந்நெறி நன்மையன் ஒரு கடவுள் உண்டென்னும் நம்பிக்கையை நான் கடக்கக் கடவேனல்லேன்" என்னும் ஓர் மனதின் இயக்கமாம் என்று சாதிக்கின்றார் இவர். இது "நம்பும் இச்சை" (will to believe) என்று அழைக்கப்படுகின்றது. "நான் இருந்துதான் தீர்வேன்" என்ற சிந்தனையே அனைத்திற்கும் அடிப்படையாயின் வாழ்க்கை பொருளற்றதாகி விடுகின்றதென்று இவர் கருதுகின்றார். இவர் கருத்துக்களைப் பின்வருமாறு சுருக்கிக் கூறலாம்:—

"சிந்திப்பதெல்லாம் இறுதியில் ஒன்றினைச் செய்வதற்கே யாகவன்றோ! செய்வேன் என்ற உறுதியிலையாயின் இருப்பேன் என்ற சிந்தனை நோக்கமற்றதாகிவிடுமே! புலனது அனுபவம் ஒன்றை நாம் கையாளுங் கருத்தெல்லாம், உண்மையில் அதனை ஒரு நோக்கத்தை நிவறவேற்றுவதற்குரிய கருவியாகவேயன்றி வேறன்று. ஆதலின், சிந்தனைத் திறத்தில் உபயோகமடையக்கூடிய உபாயமே உண்மை எனப்படுவதாம் என்றும், மற்று, செய்கைத்திறத்தில் உபயோகமடையக் கூடிய உபாயமே செம்மையெனப் படுவதாம் என்றும் கொள்ளல் வேண்டும். மானுட அறிவு இருவகைப்படும். ஒன்று உறவினால் நமக்கு வரும் அறிவு; இதனில் பொருள்கள் நேரே தெரிந்துகொள்ளப்படுகின்றன. மற்றது, பெறப்பெறும் அறிவு; இதனில் பொருள்கள் கருத்துக்களின் மூலமாகத் தெரிந்துகொள்ளப்படுகின்றன. ஒரு பொருளைப்பற்றி உறவினால் தெரிந்துகொண்டதை, கருத்தினால் நாம் தெரிந்திருப்பவைகளைக்கொண்டு சோதித்துக்கொள்கின்றோம். இந்தச் சோதனையின் பயனே அனுபவம்எனப்படும். இவ்வனுபவம் அல்லது பிரக்ஞையானது, மனதிற்கேனும் உடலிற்கேனும்உபயோகமாயிருக்கவேண்டும் என்னும் தூண்டலுக்கிணங்கி, எத்தனை யெத்தனையோ ஒருங்கே இயல்வதாயிருக்கின்ற இப்பிரபஞ்சமாம் பேரரங்கினின்று, தன் கவனத்திற்கு ஏற்றதாய்ச் சிலவற்றையே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றது. இதனால், அலகிலாப் பெருவெளித்தொடரில் ஓயாமல் அடர்ந்துபடர்கின்ற அணுக்களின் படலங்களிலிருந்து அப்பிரக்ஞை (அல்லது அனுபவம்) தனக்கே யென்று ஒரு உலகத்தைத் தனியாக வகுத்துக்கொள்கின்றது. எனின், பிரபஞ்சமே நம் கருத்தில்தான் இருக்கின்றது என்பது இவ்வகையில் நோக்குங்கால் உண்மையாம். புலன்களால் வரும் உறவறிவினைக் கருத்தினாற் பெறப்பெறும் அறிவினால் கையாளும்போது, கருத்துக்கள் உடலிற்கும் உணர்விற்கும் உபயோகமாகக் கூடும் என்ற சிந்தனையே முன்னிற்கக்காண்கின்றோம். இவ்வுபயோகம், உணர்வின் கிளர்ச்சியைக்கொண்டு சோதிக்கப்படுவதாம். இவ்வுபயோகத்திற்கு உரிய உபாயங்களாகவே உண்மையும் செம்மையும் கருதப்படுகின்றன. நேராகவாயினும் மறைமுகமாகவாயினும் உதவுவன வெல்லாம், உபாயங்களே. உடனே அவ்வுபாயம் பயன்தர வேண்டுமென்ற அவசியமுமில்லை. நாளாவர்த்தியில், சென்றதெல்லாம் செல்ல எஞ்சிய அளவில் பயன்தருவதும் உபாயமெனக் கொள்ளப்படும். இவ்வுபயோகமும் அதன் உபாயமும் நிச்சயமாவதற்கு, புலன்களால் வரும் உறவறிவினை, கருத்தினிற்பெற்ற அனுபவ அறிவினால் சோதித்து உணரவேண்டுமேயன்றி, கருத்தின் அனுபவத்தைப் புலன்களைக்கொண்டு சோதிக்கலாகாது; அவ்வாறு சோதிப்பது இயலவும் இயலாது. புலன்கள் எதிர்பார்க்கின்றவைகள் நிறைவேறும்வகையில் அக்கருத்துக்கள் சோதனைக்குள் அடங்காவாயின், அதுபற்றி, அக்கருத்துக்களைக் குறைய மதிக்காமல், புலனறிவு என்னபுகன்றாலும் புகல்க, கருத்தினது அனுபவமே மெய்ம்மை, என்னும் நம்பிக்கை நம் உள்ளத்தில் முன்னுரைத்தபடி உறைந்திருப்பதால், அந்நம்பிக்கையிச்சைக்குப் போதிய ஆதரவு அளிப்போமாயின் பின் உய்யவல்லவர்களாவோம்."

நாம் மேற்கொண்டிருக்கின்ற கட்டுரையைச்சார்ந்தவரையில், வில்லியம் ஜேம்ஸ் என்பவரின் சித்தாந்தங்களில் இத்தூரந் தெரிந்[illegible]ல் போதும்.

199208



# கம்பராமாயணம்

## கிஷ்கிந்தா காண்டம்—10. கிட்கிந்தைப் படலம்

[140-வது பக்கத் தொடர்ச்சி]

### மனுவின் நீதியோ மக்கள் மாயமோ

சரற்காலம் மெல்லமெல்லச் செல்லலும், சுக்கிரீவன் வருதற்குரியஎல்லையும் வந்தது; மற்று அவனோவந்திலன். புழையடைத்து ஒடுங்கிய அந்நண்டேபோல் இவன் தன் அந்தப்புரத்தின் கடையடைத்து ஒடுங்கிக்கிடப்பதானான். காலத்தை ஒவ்வொரு நாழியாக அளந்துகொண்டிருந்த இவ்வூழியான் இராமன், தன்னுடைய நாடக அமைதிக்கு இனி அவ்வானரத்தலைவன்மீது முனிவுகொள்ளல் முறைமையாமென உன்னினான். உன்னிப் பின்வருமாறு இலக்குவனைநோக்கி யியம்புவான்:—

அன்ன கால மகனு மளவினின்
முன்னை வீர னிளவலை மொய்ம்பினோய்
சொன்ன வெல்லையி னூங்குமத் தூங்கிய
மன்னன் வந்திலனென்செய்த வாறரோ.

[அத்தன்மையதான சரற்காலம் கழியுமளவில், மூத்த வீரனாகிய இராகவன் தன்தம்பி இலக்குமணனை நோக்கி, பராக்கிரமம் உடையவனே, சுக்கிரீவனை வரச்சொன்ன நான்கு மாத எல்லை கழிந்தபின்னும், தூங்கிக்கிடக்கின்ற அவ்வானர அரசன் வரவில்லை; என்ன, அவன் இப்படிச் செய்தான்.]

இவன் இப்படிச் செய்தது யாதும் வியப்பன்று. முன்னே, சிவபிரானும் பார்வதியும் ஓர் வில்லுவமரத்தினடியில் அமர்ந்திருந்தபோது, அம்மரத்தின் மீதிருந்த ஓர்குரங்கு,தனக்குரிய குறும்புபுத்தியால் தளிர்களைப்பறித்து அவர்கள் தலையில் தூவுதலும், சுந்தரி சினந்து நோக்க,வானரம் நடுநடுங்கிஇறங்கிவந்து தன் பிழை பொறுத்திடுமாறு வேண்டியதுகண்டு சிவபிரான், "கூவிளந்தளிர்கொண்டு எம்மை அருச்சனை புரிந்தாயன்றி யாதும் பிழை யிழைத்தாயலை; இதன் பலனாக நீ பூமியில் அரசனாய்ப்பிறந்து வாழ்வாயாக" என்று அருள்கூர்ந்து உரைத்ததுகேட்டு அம்முசுக்கலை பின்னும் வெருவி, "ஐயனே,மனிதனாகப்பிறந்து மன்னவனுமாகி மங்குறுசெல்வ வலைப்படுவேனேல், எங்கள்பிரானே, பின் எங்ஙனம் உய்கேன்" என ஓலமிட்டு நின்றதெனக் கந்தபுராணத்திற் கூறினார் கச்சியப்பசிவாச்சாரியார். மனிதரேனும் மர்க்கடமேனும் மங்குறு செல்வவலைப் படுவாராயின் முடியும்வகையொன்றே என்று காட்டற்குச் சுக்கிரீவன் இங்குத் தூங்கிய மன்னன் ஆயினான். ஆயவன் தன்மையை ஆராய்ந்து, இராமன்

பெறல ருந்திருப் பெற்று தவிப்பெருந்
திறனி னேந்திலன் சீர்மையிற் றீர்ந்தன
னறம றந்தன னன்பு கிடக்கநம்
மறன றிந்திலன் வாழ்வின் மயங்கினான்

[அச்சுக்கிரீவன் பெறுதற் கரிய செல்வத்தைப் பெற்று, அதனை அவன் பெறுவதற்கு நாம் செய்துள்ள உதவியின் பெருமையை நினைத்தானில்லை. நல்லொழுக்கத்தினின்று நீங்கிவிட்டான். அவனுக்குரிய அறத்தை மறந்தான். நம்மிடத்து அன்புவைத்து அவன் நமக்கு உதவிசெய்யானாயினும், நமது வலிமையையேனும் மனத்தில் வைக்கவில்லையே. போகமுடைய வாழ்க்கையில் மயங்கிவிட்டான்]

என, செல்வம் வந்துற்றகாலை இவன் சீர்மையிற் றீர்ந்தவாறு ஈதெனச் செப்பினான். பண்டைநாள் கைகேசியின் மனத்தைக் கலைக்கப்புக்க அக்கூனியும்,

அறநி ரம்பிய வருளுடை யருந்தவர்க் கேனும்
பெறல ருந்திருப் பெற்றபின் சிந்தனை பிறிதா
மறநி னைந்துமை வலிகில ராயினு மனத்தா
லிறனு றும்படி யியற்றுவ ரிடையறு வின்னல்

[அறத்தோடுகூடியஅருள்நிறைந்த அருமையான தவத்தைச் செய்கின்றவர்களுக்காயினும், பெறுதற்கரிய செல்வத்தைப் பெற்றபின் எண்ணமோ வேறாகிவிடும். கொடுமையே செய்யவேண்டுமென்று எண்ணி உங்களைவருத்தாவிட்டாலும், உங்கள் மனம் உடையும்படி ஓயாத தீங்கை உங்களுக்குப் புரிந்துகொண்டேயிருப்பார்]

என்று இணையற்ற நுட்பமுடன் எடுத்துக் காட்டிய இயற்கை மறக்கற்பாலதன்று. இராகவனும் இங்கு அதனையே பேசுகின்றானோ என்னத் தோன்றலாம். ஆயினும் உற்று நோக்குமிடத்து அதனிற்கும் இதனிற்கும் இடையே உள்ள வேற்றுமை புலப்படும். ஒருவர் செல்வம் பெற்றால் அந்நிலைமை எவ்வாற்றானும் மற்றவரது மனம் உடைவதற்கே இயன்றதாய் முடியும் என்பது அப்புன்மையாள் கருத்து. பிறருடைய செல்வத்தைக் காணக்காண அஃதில்லாதவர் தம்மைத் தாமே தாழ்வுற நினைத்துக்கொண்டு, அச்செல்வமுடையோரே தமக்கு இந்தத் தாழ்மையைச் செய்தாரென்று எரிகிற நெஞ்சின் ஏக்கத்தை இயம்பினாள் மந்தரை. இது, புன்மையே மானுட இயற்கைஎனக் கொண்டு பலபடப் பேசி, அப்புன்மையையே மேன்மையாக விவகரித்துப் பரிகாரம் நாடுகின்ற தற்கால நூதன மானத சாத்திரத்தின் (psycho-analysis) இனத்தைச் சேர்ந்ததாம். இத்தகைய கொள்கை, உள்ளும் புறமும் ஒருங்கே கோணிய கூனி அனையவர் புல்லறிவிற்றான் பிறப்பதற்கு ஏற்றதெனக் கம்பர் காட்டினார். இராமன் அன்ன ஆராய்ச்சியொன்றும் இங்குச் செய்யப் புகுகின்றான் அல்லன். சுக்கிரீவன் கொண்டு களிக்கின்ற அச்செல்வத்தைப் பெறுவதற்குத் தாம் செய்துள வுதவியையும், தன்னுடைய அறத்தையும், அன்பையும், தாம் அவனைத் தண்டிக்க வல்லவர் என்பதனையும் மறந்தது பற்றியே இராமன் இங்கு அவன்பாற் குறை காண்பானாகின்றான். ஆகிப் பின்னுங் கூறுவான்—

நன்றி கொன்றரு நட்பினை நாரறுத்
தொன்று மெய்ம்மை சிதைத்துரை பொய்த்துளாற்
கொன்று நீக்குதல் குற்றத்தி னீங்குமால்
சென்று மற்றவன் சிந்தையைத் தேர்குவாய்.

[நன்றியைச்சிதைத்து,அருமையானநட்பினைத்தொடர்பறுத்து, பொருந்திய ஸத்தியத்தை யழித்துப் பேச்சுத்தவறியவனைக்கொன்று ஒழித்தலோ பழிபாவம் அற்றதேயாகும். முதலில் நீ சென்று அச்சுக்கிரீவனது எண்ணம் என்ன வென்பதைத் தெரிந்துகொண்டு வா]

இவ்வாசகத்தில் இராமனது சீற்றமே நிச்சயமா
கின்றஅளவு அவன் பேசுகிற தருமம் நிச்சயமாகத்
தோன்றவில்லை. நன்றியையும் நட்பையும் சிதைத்திட
லாகாது என்னுமத் தருமம் தக்கதேயாம். சிதைப்பா
ளுயின் ஒருவன் சீர்மையிற் றீர்கின்ருன், அதுவும்
உண்மையே. மற்று, அன்னவனைக் கொல்வது குற்ற
மன்று என்னும் இவ்வொரு விதியை இராமன் எவ்
விடத்தினின்று பெற்ருன் என்பதுதான் சால ஐயம்
விளைவிக்கின்றது. நம்மிடத்து நன்றிசெலுத்தி நட்பு
வைத்து உரை பொய்த்திடாதவர்களைக் கொல்வதே
பழியும் பாவமும் ஆகு மென்றும், நன்றி கொன்று
நட்பைச் சிதைத்துப் பொய்த்தவர்களைக் கொன்று
நீக்குதல் குற்றம் அன்றென்றும் கூறு மிந்தக் கூற்று
இறுதியில் மிகக்கொடியதாய் முடியும். செய்ந்நன்றி
மறத்தலாகாதென்பது சுக்ரீவனது கடன்; அதுவே
அவனுக்கு அறனும் ஆகும். ஆயினும், அவன் அக்
கடனை இயற்ருக்காலையில், அவனை ஒறுப்பது இரா
மனுக்கு அறமாகாது. நன்றிசெலுத்தவேண்டுமென்
பது கடன்; மற்று, நமக்கு உரிய நன்றியை இறத்துக்
கொள்ளலாம் என்பதோ அறனன்று; செய்ந்நன்றி
கொன்ற மகற்கு உய்வில்லாமை உண்மை; எனினும்
அந்நன்றிகொன்றவனை, உய்யாவகை,அதற்குப்பாத்
திரமா யிருந்தவன் கொன்று தீர்க்கலாம் என, எவ்
வேதம் எந்தச்சாத்திரம் எந்தநீதிநூல் கூறியுளதோ
யாம் அறியோம், இராமனும் அறியான். அதுதானு
மன்றி, தன் தேவியைத்தேடித் தருவதற்குச் சுக்கிரீ
வன் உதவியாம்பொருட்டு, வாலியைவிலக்கி இவனை
வானரவேந்தன் ஆக்கியிருப்பானுயின், இராகவன்
அக் காரியத்தால் சுக்கிரீவனுக்குச் செய்ததனினும்
தனக்கே முடித்துக்கொள்ள நினைத்துள உதவிதான்
அதிகம். பயன்தூக்கிச் செய்த இதுவொரு உதவி
யென்று பாராட்டற்கும் உரியதன்று. இராமன் தன
க்கு இலாபமாம் என்று ஒன்றைச் செய்ய மற்றவன்
அதனைத் தன்னுடைய இலாபமாகச் செய்துகொண்
டான்; அவ்வளவே. இவ்விருவரில் எவர் பெரியர்,
எவர்சிறியர்? இத்தகையசிந்தனைகள் இராமன்மனத்
திலும் எழுந்தனபோலும். ஆதலின்,

> வெம்பு கண்டகர் விண்புக வேரறுத்
> திம்பர் நல்லறஞ் செய்ய வெடுத்தவிற்
> கொம்பு முண்டருங் கூற்றமு முண்டுங்கள்
> அம்பு முண்டென்று சொல்லுநம் மாணையே

[உலகத்தைத் தவிக்கச் செய்யும் துஷ்டர்கள் விண்ணு
லகம் அடையும்படி அவர்களை வேரோடு அழித்து, இவ்
வுலகத்தில் நல்ல தருமத்தை நிலைநிறுத்தும் பொருட்டு
நான் கைக்கொண்ட வில்லும் இருக்கின்றது, தப்புவதற்
கரிய யமனும் இருக்கின்ருன், வானரர்களாகிய உங்களைக்
கொல்வதற்கேற்ற அம்பும் இருக்கின்றது, என்று நமது
கட்டளையைச் சுக்கிரீவனுக்குச் சொல்.]

என இராமன் தனக்கு இழைத்த தனித்தீங்கின் பழி
யைத் தீர்ப்பதன்றிப் பொதுவாகத் தான் மேற்கொ
ண்டிருக்கின்ற துஷ்டநிக்ரக தருமஸ்தாபன காரியங்
களை நினைவுசெய்து, அதனுள்ளே சுக்கிரீவனுக்குச்
செய்யத் தருவதென்னுந்தண்டனையை அடக்கமுயல்
கின்ருன். இதுவே,

> நஞ்ச மன்னவ ரைநலிந் தாலது
> வஞ்ச மன்று மனுவழக் காதலால்
> அஞ்சி லைம்பதி லொன்றறி யாதவ
> னெஞ்சி னின்று நிலாவ நிறுத்துவாய்

[விஷம்போன்ற கொடியவரைத் தண்டித்தால், அது
மனுதர்ம நூலிற் கூறிய நீதியே யாதலால், வஞ்சனையோ
ஆகாது. ஐந்துவயதிற்போல ஐம்பதிலும்ஒன்றும்அறியாத
அச்சுக்கிரீவன் மனதில் இது பதிந்துநிற்கும்படி செய்யக்
கடவாய்]

எனப்பின்னரும் எடுத்தோதப் பெறுகின்றது. மனுவ
ழக்கை மேற்கோளாகக் காட்டியதனுல், இராமன்
தனிப்பழி தீர்க்கும் நினைவினின்றுபொதுதருமத்தை
நிறுவுங் காரியமாகத் தன் வெகுளியைமாற்றிக்கொள்
கின்ருனென்று ஊகிக்க இங்குச் சால இடமுளது.
சொல்லுகின்ற தருமம் அயிர்ப்பதற்கிடமாகிச் சோர்
வடைகின்ற காலத்தே சாத்திரங்களின் சார்பினைத்
தேடவேண்டிவரும். மனுவழக்குஇங்கு எதற்குமேற்
கோளாக நிற்கின்றதென அறிவது அருமை. தீயோ
ரை ஒறுத்து நீக்குதல் ஒருவகையில் அரசநீதி யாக
லாம். அரசன்றி ஏனையோர்க்கு அத்தொழில் உரிய
தன்று. இராகவன் இதுகாறும் அரசனுய் விவகரித்
துத் தீயோரை அவர் தீயராயிருக்குந் தன்மைபற்றி
யே கடிந்துள செய்தி யெங்குங் காணற்கில்லை. விரா
தன் முதல் கவந்தன் ஈருக அனைவரையும் இவன்
தனக்குத் தீங்குசெய்யப்புக்கவர் என்ற பான்மையிற்
கொன்றனனேயன்றி, அவர் தீயோரென்று தேடிச்
சென்று இம்பர் நல்லறம் நாட்டுமாறு தொலைத்தா
னல்லன். தாடகையையும் சுவாகு முதலிய அரக்க
ரையும் முன் கொன்றது கோசிகன் ஏவலில் நின்று
செய்தகாரியமாம். தாடகையைத் தன்பொறுப்பிற்
கொல்ல மறுக்கவும் மறுத்துளன். இனி, இராவண
னைப்போல் நஞ்ச மன்னவனும் வெம்புகண்டகனும்
வேறு இல்லை. அவனைத்தேடிச்சென்று, தொலைத்தி
டல் வேண்டுமென்று இராமன் நினைத்தபரிசு காண்
கிலோம். தன்னுடைய சீதையைக் கவர்ந்து தனக்குத்
தீங்கிழைத்தான் அவ்விராவணன் என்ற காரணம்
பற்றியே இராமன் அவன்மேற் செல்லலாகின்ருன்.
சென்றபின்னும் தூநின்மேல் தூது அனுப்பியும்,
முதல்நாட் போரில் தோற்றுநின்றபோது தானே நே
ராகவும், சீதையைத்திருப்பித்தந்துபிழைத்துப்போம்
படி இராமன் அவ்விராவணனுக்கு மதிகூறுந்திறமை
யே காண்கிரும். சீதையைக் கவர்ந்தானல்லனுயினு
மிராவணன் கொடியவனே. ஆதலின் சீதையைத்திரு
ப்பித் தந்தாலும்அவன் நல்லோன் எனத்தக்கவனுகை
மாட்டான். எனின் இராமபிரான், தன்பழி தீர்த்துக்
கொள்ள இராவணனை வதைத்தானன்றித் தருமத்
தைச் சாதிக்க அது செய்தானல்லன் என எண்ண
லாம். தன்பால் தீங்கு செய்யாதிருந்தும் இராமன் வ
தைத்தது வாலி ஒருவனைத்தான். மற்று, தீயோரைக்
காய்தல் என்னுந் தருமத்துள் அச்செய்கை அடங்க
மாட்டாமல் எத்தனை எத்தனைவகை வாதங்களுக்கு
அது நிலைக்களமாய்த் தீர்ந்ததென்பதை நினைக்குங்கா
லிராமன் என்னநினைத்து என்சொல்லி என்ன செய்
தான் என்னத் தேறமாட்டாதவராய்த் தயங்குகின்



ருேம். உற்று நோக்குங்கால், சுக்கிரீவனுக்கு இன்று
தந்தனுப்புஞ் சொல்லின் தன்மையும் அன்னதே.

எனின், இதன் இரகசியத்தை இராமபிரான் நடிக்
கின்ற நாடகத்தினுள் காணல் வேண்டும். வெகுண்ட
வன்போல் விளம்பவேண்டியது இப்பொழுதுஇவன்
மேற்கொண்டிருக்கின்ற பாகம். அவ் வெகுளியை
விட்டுரைக்கும் வார்த்தைகள் சுக்கிரீவன் செவிக்கு
ஏற்றனவாக இருக்கவேண்டுமென்று இவன் நினைப்
பதும் இயற்கையே. மதியின் நுட்பமேனும் உணர்
வினது மென்மையேனும் வாய்த்தவனென்று சுக்கி
ரீவனை இராமன் ஒருபோதும் மதித்ததில்லை. முன்
னர் அரசநீதியை அவனுக்குரைத்தபோதும் இப்படி
யே மேன்மைசாராச் சில மொழிகளையே செப்பியு
ளன்*. நன்றி கொன்றவரைக் கொல்லல் குற்றமன்
றென்றும், நஞ்சமன்னவரை யாரும் நலிந்துவிடலா
மென்றும் மனுவழக்கில்லை. இருந்தாலும்இராமனைப்
போன்று, மனுவையும்வென்று நின்றவர்க்கு அதுவ
ழக்காறற்றதாய்த்தீர்ந்திருக்கும். மற்றிங்கு மனுவழக்
கென்பதெல்லாம் மாயமே. 'ஐந்திலறியாதவன் ஐம்ப
திலும் ஒன்று அறியான்' என்பதுபோன்ற உலகவ
ழக்கையே உரைக்கின்ருன். "நான் இவ்வளவு நன்மை
உனக்குச் செய்திருக்க அதனை மறந்த உன்னைச் சித்
திரவதை செய்தாலும் பாவமில்லையே" என்று உயர்
விலா உலகத்தவர் வழங்குவதை எந்நாளுங் கேட்க
லாம்; இந்த உலகவழக்கைத்தான், "பொய்த்துளாற்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்" என்னும்
சொற்களால் முன்னும் பேசினன். உலகவழக்கிற்கு
மேல் ஒன்றும் உணரக்கூடியவன் அல்லன் சுக்கிரீவ
னென்பதையறிந்த இராமன் அதனிற்கே மனுவழக்
கென்று பெயரிட்டு அனுப்புகின்ருன். உலகவழக்கை
நூல்வழக்கென நுவலுமிந்தத் தந்திரம் பண்டுதொட்
டின்றளவும் நடைபெறுவதொன்று. மனுவழக்கைக்
கூறியதோடு இராகவன் முடித்துவிடவில்லை. அதனை
நடத்திவைத்தற்குரிய திறமை தமக் கிருப்பதையுஞ்
செப்புவான்—

> ஊரு மாளு மரசு நுஞ் சுற்றமு
> நீரு மாளுதி ரென்பது நேர்ந்தநாள்
> வாரும் வாரலி ராமெனின் வானரப்
> பேரு மாளுமெ னும்பொருள் பேசுவாய்

[ஊரும் குடிகளும் அரசாட்சியும் சுற்றத்தாரும் நீங்க
ளுமாகக் கலந்து வாழவேண்டுமென்பது உங்கள் கருத்தா
னுல் உடனே புறப்பட்டு வாருங்கள். வாராமற்போனுல்
வானரம் என்னும் பேரும் இல்லாமல் அழிந்துவிடும்,என்
பதைச்சுக்கிரீவன் அங்கதன்முதலியோர்க்குச்சொல்வாய்]

> இன்னு நாடுது மிங்கிவர்க் கும்வலி
> துன்னி னுரை யெனத்துணிந் தாரெனின்
> உன்னை வெல்ல வுலகொரு மூன்றினு
> நின்ன லாற்பிற ரின்மை நிகழ்த்துவாய்

[இனி, "இவ்விராமலக்குமணரைவிட வலிமையுடைய
வரை நமக்குத் துணையாகத் தேடியடைவோம்" என்று
அவர் நிச்சயித்தாரெனின், உன்னைவெல்ல இந்த மூன்று
உலகங்களிலும் உன்னையே தவிர வேறு எவரும் இல்லை
என்பதை அவர்களுக்குச் சொல்லுவாய்]

* இவ்விடயம் 7-வது வால்யூம் 756-வது பக்கத்தில்
ஆராயப்பெற்றிருக்கின்றது.

தற்புகழ்ச்சிதோன்ருவகை தன்னுடையஆற்றலைத்
தன் தம்பியின்மீதுஏற்றி இராமன் இதுபேசினுன் என்
பதன்றியும், அவ் விளையபெருமாள் தன்னைத் தான
லால் வெல்லற்கரிய வீரனுய் நிற்பதும் வாய்மையே.
முன்னர், கைகேயியின் மகன் காட்டிலும் தம்மைத்
தேடிக் கொல்லவே படைதிரட்டிவந்தனன் என்னம
தித்து இவ் வருமைத் தம்பி வீரவாதஞ்செய்து, அப்
பரதன் சேனையை ஒருநொடியில், வடிக்கணை ஒன்றி
னுல் வென்று முப்புரஞ்சுடுமொருவனிற்பொலிவன்
தான் என்று முனைந்தபோது, இராகவன் அவனை
இனிது நோக்கி,

> இலக்குவ வுலகமோ ரேழு மேழுநீ
> கலக்குவ னென்பது கருதி னுலது
> விலக்குவ தரிதது விளம்பல் வேண்டுமோ
> புலக்குரித் தொருபொருள் புகலக் கேட்டியால்

எனப்பாராட்டியதற்கிணையே இன்றிங்குரைத்தவாச
கமும்ஆகும். இலக்குவனது ஆற்றலைஅயிர்க்காவிடத்
தும்,அவனது அறிவிற்குரிய பொருளுரைகள் இரண்
டொன்று உடனுக்குடன்கற்பிக்கவேண்டியதன் அவ
சியத்தை இராமன்நன்கறிவான். இராமனிவைகளைச்
சொல்லச் சொல்ல இலக்குவனதுஉள்ளத்தில்சுக்கிரீ
வன்பால் சீற்றம் பொங்குகின்றது. முன்னே, வாலி
யும் சுக்கிரீவனும் போரிடப் புக்கபோது, "தன்முன்
னவன்வாணுள்கொள்ளக் கொடுங்கூற்றுவனைக்கொ
ணர்ந்த" சுக்கிரீவனைவெறுத்து, "மாற்ருன்எனத் தம்
முனைக் கொல்லிய வந்துநின்ருன் வேற்ருர்கள்திறத்
திவன் தஞ்சம் என்னும்" என்றுஇராமனையே இலக்
குவன் எதிர்த்துரைத்ததும், அதற்குக் கைம்மாருக,
"எத்தாயர்வயிற்றினும் பின்பிறந்தார்க ளெல்லாம்
ஒத்தாற் பரதன்பெரிது உத்தமனுதலுண்டோ" என
இராமன் வாயினின்று தான் ஓர் இளவசை வாங்கிக்
கொண்டதும் * அந்தநாளோடு இலக்குவன்மனத்தி
னின்று தீர்ந்திருக்காது. யாரைத்தான் பொறுப்பினும்
தன் தமையனைக் கொல்வித்த ஒருவனை இலக்குவன்
எந்நாளும் பொறுத்தலரிது. பின்னர், வாலியின்முன்
வாயிழந்து நின்ற தன் ஒரு அண்ணனைக்காக்கும்பொ
ருட்டு அமைதி சில இயம்ப நேர்ந்தானுயினும், தன்
அண்ணனது ஆணைப்படி அச் சுக்கிரீவனுக்குத் தன்
கைகளாலே முடிசூட்டிவைத்தானுயினும் இலக்குவ
னது கரவிலாத் தூய மனமானது சுக்கிரீவனொடு நட்
புக் கொள்ள என்றும் மறுக்கின்றது. அன்ன தன்
மையன்முன் இராமன் இங்ஙனம் சுக்கிரீவனை வெ
குண்டுரைத்தலும், நெருப்பில்நெய்சொரிந்ததுபோல்
இலக்குவனது கோப வெங்கனல்கொழுந்துவிட்டெ
ரிய இவ்வண்ணல் தன் ஆதி மூர்த்தியாம் அவ் வாதி
சேடனையே ஒத்து, ஓரம்பிலே வானரமென்னும் பே
ரைத் துடைக்கவேண்டுமெனும் பேராவலோடு நின்
றிருப்பான். "உன்னைவெல்ல உலகொரு மூன்றினும்
நின்னலாற் பிறரின்மை நிகழ்த்துவாய்" என்ற வாச
கம் இராமனது வாய்நின்று வருமுன் இலக்குவன்,
வாய்ப்பேச்சிலும்கைச்செய்கையாலேஅதனைக்காட்டு
மொரு வீரமுடன், இனி அங்குக் காலந்தாழ்க்கக்

* இவ்விடயம் 7-வது வால்யூம் 479 பக்கத்தில் ஆரா
யப்பெற்றிருக்கின்றது.

கருதானாய் அம்பென அக்கிட்கிந்தையுட்பாய ஆயத்தப்பட்டிருப்பான். இந்தக் குறிப்பைத் தனது தம்பியின்பால் கண்டனன் இராமன். தான் பூண்ட வெகுளியெல்லாம் நாடகவிளையாட்டின் சூழ்ச்சித்திறமையே என்பதறியாமல், மெய்யே யெனக் கொள்ளும் இவ்வருமைத் தம்பி அங்குச்சென்று யாது இயற்றுமோவென அஞ்சிய இராமன், அத்தகைய விபரீதமொன்றும் நேராவண்ணம்,

நீதி யாதி நிகழ்த்தினை நின்றது
வேதி யாத பொழுது வெகுண்டவண்
சாதி யாதவர் சொற்றரத் தக்கனை
போதி யாதியென் றுன்புகழ்ப் பூணினன்

[முதலில் நீதியை எடுத்துச்சொல்லி, அது அவர்கள் மனத்தை மாற்றவில்லையாயினும் நீ கோபம்மிக்கு அவ்விடத்திலேயே அவர்களைக் கொன்று நான் சொன்னவைகளைச் சாதித்துவிடாமல் அவர் சொல்லக்கூடியவைகளை என்னிடம் வந்து சொல். இனி நீ போகலாம் என்று புகழையே தனக்கு ஆபரணமாகப்பூண்ட இராமபிரான்கூறினான்.]

இந்த ஆணை இலக்குவனுக்கு இராமன் இட்டிரானாயின், சுக்கிரீவன் கதி என்னும் என்பது வெளிப்படை. இலக்குவன் முதலில் சுக்கிரீவனை ஒரே யம்பினால் வீழ்த்திப் பிறகுதான் பொறியடங்கிய அவன் செவியில் இந்நீதிகளை நெடிது நிகழ்த்தப் புக்கிருப்பானென்பதில் ஐயமில்லை. இராமனது இவ்வாணையால் தணிக்கப்பட்ட மென்மையனாயிருப்பினும், இலக்குவன் சென்ற வேகமே இவன் சித்தத்தைக் காட்டும்.

ஆணைதந்த தன்னண்ணனை அடிதொழுது, இறையேனும் தாமதஞ்செய்யாமல், அம்பறுத்தூணி ஆர்த்து நெடுஞ்சிலையேந்திப் புறப்பட்டு, கிட்கிந்தைக்கு நேர்நெறி கொள்ளாமல் குறுக்குவழியே பற்றி மரங்களுங் கற்களும் தான் செல்கின்ற வேகத்தால் நீறுபட இவன் ஏகுங்கால், மலைகளெல்லாம் ஆதிசேடன்கண்களுக்குத் தெரியும்படி பாதாளம்வரையில் அழுந்திவிட்டன. அன்றியும்,

வெம்பு கானிடைப் போகின்ற வேகத்தால்
உம்பர் தோயு மராமரத் தூடுசெ
லம்பு போன்றன னன்றடல் வாலிதன்
தம்பி மேற்செலு மானவன் றம்பியே

[அப்பொழுது, பராக்கிரமம் பொருந்திய வாலியின் தம்பிமேல்செல்கின்றவனும், இராமனது தம்பியும், ஆகிய இலக்குவன், வெம்புகின்ற காட்டிற் செல்கின்ற வேகத்தினால், ஆகாயத்தையளாவியமராமரங்களினிடைதுளைத்துச் சென்ற இராமபாணத்தையே ஒத்தான்.]

இன்னபடி, தன் தமையனது தனிவாளியைப்போலவேசென்று கிட்கிந்தையைச் சேர்ந்த இலக்குவன், மலைக்குமலை தாவிப் பாய்கின்ற ஒரு ஆண் சிங்கத்தையொத்து விளங்கினான். இராமன்தம்பி வாலியின் தம்பிமேல் இதனினுங் குறைந்ததோர் வேகமுடன் எங்ஙனம் செல்ல இயலும்!

---

## நம்மாழ்வார் வைபவம்

### திருவாய்மொழி

[7-ம் பத்து, 3-ம் தசகம்.]

[120-பக்கத் தொடர்ச்சி]

11-ம் பாசுரம்.

ஊழிதோ றூழி யுருவும் பேரும்
செய்கையும் வேறவன் வையங் காக்கும்
ஆழி நீர்வண் ணனையச் சுதனை
யணிகுரு கூர்ச்சட கோபன் சென்ன
கேழி லந்தாதி யோரா யிரத்து
ளிவை திருப் பேரையின் மேய பத்து
மாழியங் கையனை யேத்த வல்லா
ரவரடி மைத்திறத் தாழி யாரே.

குறிப்புக்கள்:—அச்சுதன் = ஆச்ரிதரிடத்தில்சலிக்காத அன்பும் பக்ஷபாதமு முள்ளவன். ஒவ்வொரு ஊழி கல்பத்திலும் அப்போதப்போதுக்கு வேண்டியபடி அடிமைகளைச்சிருஷ்டித்துக்காப்பவன். உருவும் பேரும் வேறு. ஒரு கல்பத்தில் நரசிம்மனாய் அவதரித்தான்; மற்றொன்றில்இராமனாயும் மற்றொருகல்பத்தில் கிருஷ்ணனாயும் அவதரித்தான்.

ஆழியங்கையனை—இத்தசகம் அடிதொட்டு முடியும் வரையில் சக்கிராயுதாழ்வான் திறத்திலே ஆழ்வார்திருவுள்ளம் ஆழ்ந்து வியந்து ஈடுபட்டிருப்பதை உரையில் பரக்க வரைந்துள்ளோம். திருவேங்கடத்தான் ஸந்நிதியில் சரணாகதிசெய்திட, உடலும் யாக்கையும் கழிந்து பிரக்ருதி ஸம்பந்தமற்று ஸதா ஸர்வகாலமும் வைகுண்டத்தில் எம்பெருமானுக்குஸர்வவித அந்தரங்க கைங்கரியமும் செய்து தனது சுயரூபத்தைப் பயனாக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆசையல்லவோ ஆழ்வாரைத் தூண்டியது? இக்கைங்கரியத்திலும் தொண்டுபணிவிடைகளிலும் யார் சக்கரத்தாழ்வான்போல ஆழ்ந்திருக்கின்றார்! ஆகையால்இப் பலசுருதியில் தன்மனோரதம்போலவே எல்லாப் பக்தர்களுக்கு மிருக்குமென்று நினைத்துத் தனக்கு அத்தியந்தப் பிரியமான பலமே, திருவாய்மொழியிலித் தசகங்கொண்டு பாடவல்லவருக்கும் கிட்டுமென்று ஆசீர்வாதம் அளிக்கிறார்.

இரண்டாவதாக, இச்சக்கராயுதமல்லவோ அர்ச்சுனனின் சபதத்தையும் நிறைவேற்றிக் கொடுத்தது? பாரதப்போரில் அர்ச்சுனனது அருமைமகன் அபிமன்னியுஎன்பானைச் சயந்தவன்என்ற ஸிந்துதேசத்து அரசன் போர்க்களத்தில் யாவராலும் நிர்வஹித்துக் காத்துக்கொள்ளமாட்டாத மிக்க மந்திரசக்தியுள்ள பாணங்களைக்கொண்டு கொன்றபோது தகப்பன் புத்திரசோகத்தால் பீடிக்கப்பட்டவனாய் வருந்தி 'இச்சயந்தவனை நாளைக்குள் சமரில் கொல்லாவிடில் என்னுயிரை மாய்த்துக்கொள்ளுவேன்' என்று சபதமிட்டான். இந்தப் பாரதயுத்தம் தர்மயுத்தமுறையின் வழிப்பட்டு நடந்தேறியதால் இவ்வாணையை எல்லாருமறிந்து அவரவர்விருப்பத்துக்கும் மனோபாவத்துக்கு மேற்றபடி மறுநாள்யுத்தத்தில் அணிவகுப்பில் நின்று ஊக்கங்கொண்டார்கள். கௌரவர் பாசறை



மந்திராலோசனையில் "அர்ச்சுனன் கண்களுக்குப் புலப்படாமல் சயந்தவனைநாம் நிராயுதபாணியாய் யுத்தகளத்திலேயே ஒளித்து மறைத்து வைத்தால் பின் அர்ச்சுனனால் செயற்பாலதென்; சபதப்படி பொழுதிறங்கினவுடனே அவன் உயிரை மாய்த்துக்கொள்ளுவான்; பாரதப்போரும் ஒருவாறு நமக்கு நன்கு முடிவெய்துமல்லவோ" வென்று தீர்மானித்தார்கள். மறுநாள்யுத்தத்தில் எவ்விடம் தேடித்துருவியும்சயந்தவனைப்போர்க்களத்தில் ஆண்மைக்கேற்ப இருந்தானெனினும் ஒருவராலும் காணமுடியவில்லை. போர் நீடித்தது. மாலைப்பொழுது மிறங்கலாயிற்று. ஸூரியனும் மலைவாயில் வீழ்வான்போல இருட்டுப் பரவலாயிற்று. இச்சமயம் எல்லாக் கௌரவ வீரர்களும் அர்ச்சுனன் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளப் போவதைக்காணத் திரண்டுவந்து உற்சாகித்து அம்புஎய்வதைத் தவிர்ந்து வில்லுங் கையுமாய் ஆவலுடன் அவரவர் இடத்திருந்து எதிர்பார்த்திருந்தார்கள். பாண்டவர் ஸைந்நியத்திலும் ஆரவாரம் ஒய்ந்தது. இரண்டொரு க்ஷணத்தில் ஆதித்தியனும் மலைவாயிலில் விழுந்து அஸ்தமித்து மறைந்துஇருள்கின்ற ஸமயம் நெருங்கிவிட்டது. இருட்டும் எல்லாத்திசையிலு முலகத்தைச் சுற்றிக்கொள்ளத் துடங்கியது. இந்தஸமயம் என்ன நேரிடுமோவென்று எல்லாரும் அவரவர் விருப்பு வெறுப்புக்களுக்கேற்ப எண்ணமிட்டிருந்தாரேனும் எல்லாக் கண்களும் ஸ்ரீகிருஷ்ணபகவான் ஓட்டுகின்றதேரில் அர்ச்சுனனையே ஏகாக்ரசித்தமாய் நோக்கிக்கொண்டிருந்தன. இப்படிஎல்லாரும்ஏகதிருஷ்டியாய்த் தேரை இலக்குவைத்துநோக்கச் சயந்தவனைச் சுற்றி இட்டிருக்கும் மெய்க்காவலாளரும், முழுவதும் பகல்பொழுது சாய்ந்ததாகத் தோன்றினபடியாலும், போரில் அமளி ஒய்ந்ததாலும் அசதியாலும் தாம் ஏற்ற கடமையை மறந்து ஸ்வவியூகம் கலைந்து அத் தேரையே நோக்கி நிற்க ஜயவீரனான ஜயத்திரதனும் வெளிப்பட்டு அத்திசையை நோக்கினான். மானிடர்களும் விலங்குகளைப் போலவே ஒருவர் செய்வதையே மற்றவர்களும் செய்வார்களென்பது ஸம்பாவிதமல்லவோ? இது இயற்கையறிவோ செயற்கையறிவோ! இருள் மூடமூட எல்லாரும்ஜாக்கிரதைதப்பிக் கலைந்து ஏமாந்திருப்பார்களென்ற உண்மையை முற்றுமறிந்து, உலக இரக்ஷணத்திலும் ஆச்ரிதவாத்ஸல்லியத்திலும்கருத்துடையவனான ஸ்ரீகிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கு ஜயத்ரதன் வெளிப்பட்டு நிற்பதைச் சுட்டிக் காண்பித்துப் பாணங்களை விட்டு அவன் தலையையறுத்துவிடச் சமயம் இதுவேயெனக் காலத்தையும் நியமித்துக் கொடுத்தான். இரண்டு கைகளாலும் பாணங்களைவிடப் பயின்ற அர்ச்சுனனே உடனே தானே ஜயத்ரதனது தலையைத் துணித்து, மேற்கொண்டு ஒரு அம்பின்பின் ஒன்றாய்எய்து அந்த அறுப்பட்ட தலை கீழே விழாதபடி ஆகாயமார்க்கத்திலேயே பகவான்கட்டளையிட்டபடியேசெலுத்திச்செலுத்தி, ஸியமந்தபஞ்சகநாடுதாண்டிக்காட்டில்சென்றுதவமியற்றும்ஜயத்ரதனது தகப்பனான வ்ரிதக்ஷத்திரன் நீரோடையில் ஸந்தியாவந்தனம் நிமித்தம் தன் கைகளில் நீரெடுத்துஆகாயத்தில் எறிய விரித்தபொழுது அந்தக் கைகளான கமலங்களில் நேராக இறங்கி விழுந்துசேரும்படியாகச் செய்தான். இவ்வண்ணம் ஸம்பவிக்குமோவெனச் சங்கை கொள்ளலாகாது. ஈசன் அருள் வாய்ந்தவர்க் கெதுதான் ஸாத்தியமாகாது? மற்றொரு விஷயமும் இந்தச் சந்தர்ப்பத்தில் கருதவுள்ளது - கௌரவ வீர ரெல்லாரும், கொக்கினுக்கு உருமீன் ஒன்றே யென்று சொல்வதுபோல், அர்ச்சுனன் மரணத்தையே எதிர்பார்த்திருந்தாராதலின், அர்ச்சுனன்விட்ட பாணங்கள் தடையின்றி ஏவியபடி கடந்து செல்ல இடங்கொடுத்தது. அன்றேல் பகவானின் சூக்ஷ்ம ஏவலும் பயன்படாமல் வீண்போகும். இது நிற்க. தன் மகனின் அறுபட்ட தலை கையில் விழ, தகப்பன் திடுக்கிட்டு அதனை, பூமியில் உதறினான்; அத் தகப்பன்தலை நூறு துண்டுகளாய் உடைந்து அவனும் மாண்டான். இது ஏனெனின்; வ்ரிதக்ஷத்திர னென்பான் சிந்து தேசத்து ராஜா; இவன் திருதிராஷ்டிரராஜன் மகளை மணந்திருந்தான். வெகு காலம் வரையில் மகப்பேறில்லாமலிருந்து பிறகு ஜயத்ரதன் பிறந்தான். பிறந்த உடனே ஓர் அகாயவாணிதோன்றி உரத்த குரலால் "இம்மகன் ஸிந்து தேசத்து அதிபதியாயிருந்து கீர்த்திமானா யிருப்பான்; வெகு யுத்தங்களில் ஜயவீரனாயிருப்பான். ஆனாலும் இவன் ஓர்யுத்தத்தில் ஓர் காலத்தில் தலை அறுபட்டுக் கீழே வீழ்ந்து மறிப்பா" னென்றது. இதைக் கேட்ட அரசன் கோபாவேசங்கொண்டு "என் மகனின் தலையைப் பூமியில்வீழ்த்துபவனுடைய தலை நூறுதுண்டுகளாய் உடைந்து சாவான், என் தவங்களுக்குப் பயனுண்டெனில் இதுஉண்மையாகட்டும்" என்று எல்லாவரும் கேட்கச் சபதமிட்டான். அவன் ஆணையே அவன் தலையை வெடித்து வீழ்த்தியது.

1 குறிப்பு:—ஆண்டவன்விதி அவரவரின் ஜன்மாந்திரங்களிலியற்றிய இருவினைக்கேற்ப நடப்பதென்ற உணர்ச்சியைக் கைப்பற்றி நாம் ஈசனின் நீதியையும் ரீதியையும் மதிப்புத்தூக்க வல்லவரல்லரென்றும் ஸர்வஞ்ஞனது ஸங்கல்பங்கள் பட்டாங்கிலுள்ளபடி நடப்பனவென்றும் அறிந்து தேறவேண்டும். ஆனாலும், தர்மயுத்தத்தில் பிள்ளையின் தலை துமிப்பவன் தன்தலை வெடித்துக் கெடவேண்டுமென்று கடுஞ்சினத்துக் காளாகச் சாபமிடுதல் அல்பமானிடன், எவ்வளவுதபசியானாலும் செய்யவொண்ணாது. இது ஈசன் ஸங்கல்பம் கர்வபங்கமான கொடுமை கொண்டதே என்று யாமொருவாறு துணிந்து எழுதுவாம். யுக்தவயதில், தன் பிள்ளைக்கு முடிசூட்டித் தவமியற்றச் சென்ற தகப்பனிப்படி மரிக்க, ஸூரியன் அந்தகாரம் நீங்கி உலகமெங்கும் கோடி கிரணங்களால் தனக்கு உரிய தேஜஸைவீசி இருட்டை விடுவித்தான். எல்லா உலகும் வியப்புற்று இச்சம்பவம்யாதுகாரணம்பற்றி வந்ததென்று ஒருவரை ஒருவர் வினவி, இது ஸ்ரீகிருஷ்ணபகவான் தன் சக்காயுதத்தை ஆச்ரிதரின் ரக்ஷணத்தின் பொருட்டு ஏவிச் சாயுங்காலம் வருமுன்னரே ஸூரியனை மறைந்திடச்செய்தானென்று ஊஹித்து [illegible] வியந்தது.

குறிப்பு:—முதல் குறிப்பில் வகுத்துரைத்தபடி

199208
m211,N28KN
N35.8.W

தெய்வக் கோட்பாடு தன்வினை தன்னைச் சுடுமென்ற நீதியை யனுசரித்து மற்றொருசரித்திரமும்இப்பிரஸ்தாபத்தில் எடுத்தெழுதற்பாலது.

ஸ்ரீகிருஷ்ணபகவான் பாரதப்போர் முடிவு பெற்றவுடன் துவாரகைக்குத் தன் திருத்தேரில் போகையில் வழியில் உத்காலர் என்ற மஹரிஷி நூற்றாண்டுகளாகத் தன்னையேகுறித்துத்தவம்புரிவதை ஞாபகப்படுத்திக்கொண்டு அவர் தவமியற்றும் குகைக்குள் சென்றார். அந்த ரிஷி ஸ்ரீ கிருஷ்ணனைப் பார்த்ததும் பாரதப்போர் முடிந்ததாவென்று கேட்டுத் தெரிந்துகொண்டு "ஐயோ, எல்லாக் கௌரவர்களையுமவர்கள் நட்பாளரையும் சேனையும் தொலைத்தாயே" யென்று பரிதபித்துப் பகவானைக் குற்றஞ்சாட்டினரயினும் உத்தர க்ஷணத்திற்குள் தானே புத்திதெளிந்து தான் சொல்லியது மிகையென்றும் அசத்து வாக்கியமென்றும் பகவான் க்ஷமித்தருள வேண்டுமென்றும் வெகு வாய்த் துடித்துப் பரிதபித்துப் பிரார்த்தித்தான். இது ஓய்ந்ததும் தனக்குமோக்ஷம் வேண்டுமென்ற உபக்கிரமத்தில் ஆரம்பித்ததன் தவப்பயனைப்பகவானை யாசிக்கவே பகவான்உலகத்தின் ஹிதத்தையேநாடும் பஞ்சபாண்டவர்களிடத்தில் துவேஷ புத்தியும் அஸத்துக்களான கௌரவர்களிடத்தில் அன்புவாய்ந்த பக்ஷபாதமும் உனக்கு நிஷ்காரணமாய் ஏற்பட்டிருப்பது நீ உன் மனதை மலமறக் கழுவிச் சீர் தூக்கி நடுநிலைமையில் ஏற்ற முயற்சிசெய்து ஸாதகம் செய்யாததினால் வந்தது. சாந்தியில்லா மனம் எங்ஙனமோ பீடு பெறும். இன்னமும் ஒரு நூற்றாண்டு தவம் புரிந்து ஸித்தியடைய முயற்சிசெய்" யென்று கட்டளையிட்டு ஊருக்குளெழுந்தருளினான்." இங்குஇருடியின்மனமே அவரைச் சிறுமைப்படுத்தியதைக் காண்க.

குறிப்பு 3:—இதைத் தொடர்ந்து கேள்வி ஒன்று உதிக்கலாம். எவ்வளவு தவமியற்றுபவர்களும் தீவிர பக்தர்களும்ஆனாலும் சிற்சில சந்தர்ப்பங்களில் பிறர்க்குத் தீங்குநினைக்க நேரிடாதோ? அதைக் கொண்டு அவர்களைப்பற்றி நிந்தை கூறக்கூடுமோ? துர்வாஸர் என்ற மஹாரிஷி பாண்டவர்கள் வனஸஞ்சரியாய்ப் போஜனத்திற்கு அக்ஷயபாத்திர மென்றஓர் திவ்விய உணவாக்கும் பாத்திரத்தினது ஸஹாயத்தை எதிர்பார்த்துத் திரியுங்காலையில் தன் சீடர்களுடன் பகல் உச்சி நேரம் கடந்தபின்னர்த் துரியோதனன் ஏவலினால் அனார்த்திகளாகச் செல்லவில்லையா? பாண்டவர்களைத் துர்த்தரைக்கு ஆக்கவேண்டுமென்ற ஒரு கெட்ட கருத்துக்கு இருடியாயிருப்பவர் இணங்கலாமோ வென்ன — இதற்கும் ஸமாதானம் வரைவாம். தம்பக்தியின் முதிர்ச்சியாலும்,நீளாதேவியின் அபார அவதாரமான ஆண்டாளென்ற பரதேவதையான தேவியை வளர்த்தெடுத்த சம்பந்தத்தினாலும் "பெரிய" ஆழ்வாரென்று பகவானே விளிக்க உரிமையுள்ளவர் "அவனடியார் அது (- அதாவது தீது) செய்யார் செய்தாரேல் அதுவும் நன்றாம்" என்றல்லவோ பாசுரம் படித்தார். துர்வாஸ்ஸர் கதை முழுவது மெழுதினால் விரியும். மேல்படி பெரியார் வாக்குக்கிணங்க இவ்விருடிக்கிட்ட ஏவல் என்னவாயிற்று?—பாண்டவருள்ளும் பரம பக்திசிகாமணியான ஸஹாதேவன் வேண்டுகோளால் இவ்விருடியும் சீடர்களும்,நீராடிப் பகல் ஸந்திக்கடனைச்செலுத்தநதிக்கு ஏக அங்கு நீராடி எழுந்தவுடன் பசி தீர்ந்தார்கள். ஸ்ரீகண்ணபிரான் அக்ஷயபாத்திரத்தில் ஒதுங்கிநின்ற ஒரு பருக்கையே யாகிலும் எனக்குக் கொடு. வளர்ப்பசி திரௌபதியே! எனக்கு அன்னமிடு" என்று துர்வாசஸர் முழுகப்போனஸமயத்தில் யாசிக்க, அவள் "அந்தோ, பாத்திரத்தைக் கழுவிக் கவித்துவிட்டேனே? நாளைக்கல்லவோ அது நமக்கு உதவக்கூடும்? என்செய்கேன்" என்றுசொல்ல,"பாத்திரத்தைத்திற ஒருபருக்கையாவது ஒட்டியிருக்கும், அதனை எனக்குதவு. என் பசி நலிகின்ற" தென்றார். இவன் வந்தது உத்தமியான திரௌபதியின் பிரார்த்தனைக்காகவேயன்றோ? கண்ணன் உதவி புரிவான் என்றல்லவோ ஸஹாதேவன்நிச்சயித்து இருடிகூட்டங்களைச் சாப்பிட வரச் சொன்னது? அந்தப் பாத்திரத்தில் ஒட்டி ஓரத்தில்ஒதுங்கியிருந்த ஒருசோற்றுப்பருக்கையைக் கிருஷ்ணபகவான் விழுங்கவே அச்சமயம் பசியால் வருந்தும்இருடிகளுள்பட எல்லாப்பிராணிகளும்பசி தீர்ந்தார்கள். முக்காலங்களையும் உணரக்கூடியஇவ்விருடி "நாம் துரியோதனன் அன்னத்தை வெகு நாள் புசித்ததனால் அவன் சதியில் வீழ்த்தப்பட்டோம். இக்கொடியான் பாண்டவர்கள்கையில்நாசமடைக" வென்று அவனுக்கே சாபமிட்டார். தீங்கு இயற்ற ஒருவாறு இவ்விருடி ஏற்றதும் உலகத்துக்கு "நன்றாகவே" முடிந்ததன்றோ? பெரியாழ்வார் வாக்குப் பொய்த்ததோ? பொய்க்குமோ?

பகவான் தன் ஆச்ரிதரை இரக்ஷித்தருளும் ஸ்வாபமுடையவனென்பதை நம் ஆழ்வார் இத்தசகத்தில் காட்டுகின்றார்.

# ஒத்தெல்லோ

## ["Shakespeare's —Othello"]

அங்கம் 1. களம் 3.

[136-பக்கத் தொடர்ச்சி]

ஒத்தேல்லோ:—கருத்தின் மிக்க செனட் சபையினர்காள், வன்மைமிகு வழக்கமானது,கல்லினும் எஃகினும் இயன்ற போரின் கட்டிலை, மும்முறை தூற்றிய என் தூவிப்படுக்கையாக்கி யிருக்கின்றது.[1] இயற்கையும் விரைவுமுள்ள சுருசுருப்பினையான் கடினத்திற் காண்கின்றேனென்பதை ஒவ்வுகின்றேன்[2]. துருக்கருக் கெதிர் யானின்று இப்போரினை மேற்கொள்வேன். ஆதலின், நுந்தம் பதவிக்கு வணங்கி, என் மனைவிக்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டுகின்றேன்; இடத்திற்கும் செலவிற்கும் உரித்தாய நியமனமும்; அதனுடன், அவள் வளர்ப்பிற்குச் சமமான தகுதி வாய்ந்த வசதியும்[3].

நகரத் தலைவர்:—உனக்குச் சம்மதமாயின், அது அவள் தந்தையின் மனையில் அமையட்டும்.

ப்ரபான்ஷியோ:—அதனை அவ்வாறு கொள்ளேன் யான்.

ஒத்தே:—நானுங் கொள்ளேன்.

டேஸ்டிமோனா:—நானுங் கொள்ளேன்; அவர் கண்ணில் இருத்தலால் பொறுமையற்ற எண்ணங்களில் என் தந்தையைச் சேர்க்க நான் அங்கு வசிக்க இசையேன்[4]. தயைமிகு பிரபுவே, நான் விள்ளுவதற்கு நும்வாழ்வுடைச் செவியைத் தந்து என்பேதைமைக் குதவிசெய்ய நுந்தம் குரலில் நானோர் அனுமதிப் பத்திரம் காணுமாறு அருள்க[5].

தலைவர்:-யாது நீ வேண்டுகின்றாய்,டெஸ்டிமோனா?

டேஸ்டி:—இவரோடு வாழவே நானிம் மூரைக் காதலித்தேன் என்பதை, எனது நேருற ஆழ்ந்த வன்மையும் அதிர்ஷ்டத்தின் சூறாவளியும் உலகத்திற்கு எக்காள மூதலாம்[6]. என் தலைவரது குணத்திற்கே எனது இதயம் வசப்பட்டிருக்கின்றது; ஒத்தெல்லோவின் முகத்தை அவர் மனத்திற் கண்டேன்[7]. அவருடைய பெருமைக்கும் ஆற்றல்சால் அம்சங்களுக்கும் என்னுடைய ஆன்மாவையும் அதிர்ஷ்டங்களையும் சமர்ப்பித்தேன்[8]. ஆதலின், அருமைமிகு பெருமக்காள், அமைதியிற்றோய்ந்த சிதடியாக யான் பின்னே விடப்பட்டு அவர் போரிற்குச் செல்வாராயின்[9] எற்றுக்கு நான் அவரைக் காதலித்தேனோ அந்தச் சடங்குகள் எனக்கு இழந்தவைகளாகின்றன[10]. அரிய அவர் பிரிவின் பாரமுடைய இடைக்காலத்தைச் சுமக்கவேண்டியவளாவேன் நான். அவரோடு நான் செல்லுமாறு விடுங்கள்.

ஒத்தே:—பிரபுக்காள், உங்கள் குரல்கள்[11]. உங்களை வேண்டிக்கொள்கின்றேன், அவளது இஷ்டம் தடையின்றிவழிபெறட்டும். விண்ணகமே என்னொடு சான்றாகுக[12]. எனதுவேட்கையின் அண்ணத்தைப் பிரீதிசெய்யவேனும், அல்லது, - இளமையின் விகாரங்கள் என்னில் அவிந்துகிடக்க - வெம்மைக்கும் அதன் இயற்கையான சமனத்திற்கும் உடன்படுவதற்கேனும் அன்று நான் இதனை இரந்து கேட்பது[13]; மற்று, அவளது மனதிற்கு வரையறையின்றி உதாரமா யிருக்கும்பொருட்டேயாம்[14]. அவள்என்னுடனிருக்கின்றாள் என்ற காரணத்தால், நான் உமது முக்கியமான இந்தப் பெரிய காரியத்திற்குக் குறைவு செய்வேனென்று நீர் எண்ணுவண்ணம் விண்ணகமே நுமது நல்ல ஆன்மாக்களைக் காக்கட்டும்[15]. அன்று அன்று; என் களியாட்டங்கள் எனது காரியத்தைக் கெடுத்துப் பழுதுசெய்யும்படி, இறகுடை க்யூபிட்டின் மென்சிறைப் பொம்மைகள், எனது சிந்தனையின் உத்தியோகத்தின் கருவிகளை விளையாட்டுடைய தாமதத்தினால் தைத்துவிடும் நாள்[16], மனைவிமார் என் தலைச்சீராவைச் சமைக்கும் பாத்திரமாக்கி,

(1) மணப்பள்ளியைவிட்டுப் போர்க்களம் புகுதல் வேண்டுமென்றுதலைவர் கூறியதற்குப்பதிலாக ஒத்தெல்லோ, அதுவே தனக்கு இயற்கையென்றுஇயம்புகின்றான்.

போர்க்களத்திலேயே பழகிப் பழகிப் உரம்பெற்றிருக்கின்ற நான், கல்லைத் தலையணையாகவும் இருப்புக்கவசத்தைப் பாயலாகவுங் கொண்டு, தூற்றித்தூற்றி எடுத்தமிக மெல்லியஇறகுமெத்தையில்உறங்குவதுபோல் உறங்கவல்லேன் - என்பது பொருள்.

(2) கடினமான காரியங்களைச்செய்வதற்கே விரைவது எனக்கு இயற்கையாக இருக்கின்றது.

(3) அவள் வசிப்பதற்குத் தக்க இடமும், மற்று, அவள் அந்தஸ்திற்கு ஏற்ற வசதிகளும்,(அளிக்கவேண்டும்)என்று முடியும்.

(4) என் தந்தையின் மனையில் வசிப்பேனாகில், அவர் என்னைப் பார்க்குந்தோறும் பொறுமை யிழந்து சஞ்சலப்படுவார். அவரை நான் இப்படிச் சஞ்சலப்படுத்த இசையவில்லை.

(5) விள்ளுவதற்கு - சொல்வதற்கு. வாழ்வுடைச் செவியைத் தந்து - நான் வாழுமாறு நீர் கேட்டருளி.

என் பேதைமைக்கு......அருள்க-நானோ பேதை, என் கருத்தைச் செவ்விதின்தெரிவிக்கக்கூடிய சொல்வன்மை எனக்கில்லை. ஆகையால், நீங்களே என்சார்பு பேசி நான் வேண்டிக்கொள்வதற்கு அனுமதி அளிக்கவேண்டும்.

(6)அதிர்ஷ்டத்தின் சூறாவளி-தன் அதிர்ஷ்டத்தையெல்லாம் இக்காரியமாகிய கடுங்காற்றில் தூற்றிவிட்டதாகக் கூறுகிறாள். தந்தையின் அன்பையும் அதனோடு அவரிடத்திருந்து கிடைக்கவல்ல செல்வத்தையும் துறந்ததும், தான் பிறந்து வளர்ந்த மெல்லிய அமைதியுடைய வாழ்க்கைக்குமாறாக ஒரு போர்வீரனது கடுமையான வாழ்க்கையில் பங்குபெறஇசைந்ததும் இங்குக் குறிக்கப்பெறுகின்றன. எக்காளம் ஊதலாம் - எக்காளம் ஊதுவதுபோல் விளம்பரம்செய்து காட்டக்கூடும்.

(7) ஒத்தெல்லோவின் குணச்சிறப்புக்கள் என் இதயத்தைக் கவர்ந்தன. அவரது முகமும் நிறமும் எப்படியிருப்பினும் அவரது மனத்தின் அழகினையே எனது கண்கள் நாடின.

(8) அவருடைய பெருமையையும் ஆற்றலையும் கண்டறிந்த நான், இம்மைக்குரியசெல்வமுடன் மறுமைக்குரிய ஆன்மாவையும் சேர்த்து என் முழுவாழ்வையு மவருக்கே அளித்துவிட்டேன்.

(9) சிதடி - ஒருவகை விட்டில் பூச்சி. அமைதியிற்றோய்ந்த சிதடி...செல்வாராயின் - ஒருபயனும் அடையாமல் ஒரே இடத்தில் சும்மா கிடக்கும் விட்டில் பூச்சிக்கு நான் நிகராகும்படி என்னைவிட்டுவிட்டு அவர்போரிற்குச் செல்வாராயின்.

(10) அவரை மணந்ததன் பயனைப் பெறாதவளாகின்றேன்—அவரைக் கூடி வாழவேண்டுமென்றே காதலித்தேன், மணச் சடங்கும் முடிந்தது, மணம் முடிந்தும் உடனிருக்க விடாமல் எம்மைப் பிரிப்பீராயின் யாதுபயன்?

(11) குரல்களை வேண்டுகின்றேன், என்று முடியும். அவள் இஷ்டப்படி என்னுடன் வரலாம் என்று அனுமதி கொடுக்குமாறு வேண்டுகின்றேன்—என்பது பொருள்.

(12) நான் இப்பொழுது சொல்கின்றவைகள் உண்மை யென்பதற்குக் கடவுளேசாக்ஷியாகக் கூறுகின்றேன்.

(13) டெஸ்டிமோனா என்னுடன் வரவேண்டுமென்று நான் காமவேட்கையின் மிகுதியினால், உங்களை இரந்து கேட்கின்றேனென்று எண்ணுதீர்—என்பது பொருள்.

அண்ணம் - மேல்வாய்—சுவையறிகின்ற வாயின் ஒரு பாகம். வேட்கையின் அண்ணத்தைப் பிரீதி செய்தல் - வேட்கையானது விரும்புகின்ற காமச்சுவையைக் கொடுத்துத் திருப்திசெய்தல்.

வெம்மை - காமக்கனல்; அதன் இயற்கையான சமனம் - புணர்ச்சி. சிருங்காரங்களை அனுபவிப்பதற்கேனும் காமவிடாய் தீர்த்துக்கொள்வதற்கேனும் நான் இதனை இரந்து கேட்கவில்லை.

அல்லது...வெம்மைக்கும்—எனச் சேர்த்துக்கொள்க. இளமையின்விகாரங்கள் என்னில் அவிந்துகிடக்க, என்பது இடைப்பிறவரல் (Paranthesis). கிடக்க, என்பது இங்கு, காரணப்பொருளில் வந்தவினையெச்சம், கிடப்பதால் என்றுபொருள்படும். 'நான் இளமைப்பருவத்தைக் கடந்து விட்டவனாதலால் அப்பருவத்திற்குரிய காமவிகாரங்கள் என்னில் அவிந்து கிடக்கின்றனவாதலின்...' என்பது பொருள். இதனாலும், பின் இவன்வாயினின்றும் இயாகோவாயினின்றும் வருகின்ற சில வாசகங்களாலும், ஒத்தொல்லோ இளமைப்பருவம் கடந்து நடுவயதும் கடந்தவன் என்பது தெரிகின்றது. நிறங்கரியன்,வடிவழகில்லாதவன், இளைஞனல்லன், வேற்றுச்சாதியான், செல்வமும் மிக்கானல்லன், இன்னவனைப் போய் வனப்புடைவனிதை, மெல்லியல் நல்லாள், இளமைப் பருவத்தவள் ஒருத்தி, பொதுவறக் காதலித்தசெய்தியிலும் அதன்முடி

...லா இழிவுடையநாசங்களெல்லாம்என்னுடைய கௌரவத்திற்கு மாருக எதிர்த்தழிக்கட்டும் [17].

தலைவர்:—இருக்கவேனும் செல்லவேனும் உங்களுக்குள் நிச்சயம் செய்துகொள்வதுபோ லாகட்டுமது. விரையக்கதறுகின்றது காரியம், வேகமே அதற்குப் பதிற் சொல்லவேண்டும் [18].

முதல் ஸெனட் சபை அங்கத்தினர்:—இன்றிரவே நீ அகலவேண்டும்.

ஒத்தே:—என் முழு இதயமுடன்.

தலைவர்:— காலை ஒன்பதுமணிக்கு மீண்டும் நாம் இங்குச் சந்திப்போம். ஒத்தெல்லோ, யாரேனும் உத்தியோகஸ்தனொருவனைப் பின்விட்டுச் செல்; அவன் உனக்குஉரியதாம் பதவிக்கும் கௌரவத்திற்கும் எற்றவைகளை எமது உத்திரவினோடு நின்பாற் கொணர்ந்து சேர்ப்பான்.

ஒத்தே:—பிரபுவின் சித்தப்படி, என் பதாகையாளன் [19]. நேர்மையும் நம்பிக்கையும் வாய்ந்த ஒருவன் அவன்; நல்ல நும் அருள் என்பின் அனுப்பு வேண்டுமென்று நினைக்கின்ற அவசியமான மற்றவைகளுடன் இவனது கொணர்கைக்கு என் மனைவியை ஒப்படைக்கின்றேன்.

தலைவர்:—அப்படியே ஆகட்டும். எல்லோர்க்கும் வந்தனம் - (ப்ரபான்ஷியோவைப் பார்த்து) மேன்மை சான்ற பெரியீர், நற்றகைமைக்கு மகிழ்வுடை அழகு குறைவில்லையெனின், நும் மருகன் கருமையினும் அதிகம் செம்மையே வாய்ந்திருக்கின்ருன் [20].

முதல். சே. அங்:—வீரமூர, விடைகொள்க. டெஸ்டிமோனவை நன்கு நடத்துவாய் [21].

ப்ரபா:—காணக் கண் உடையையாயின்,மூர, அவளைப் பார்த்துக்கொள்; தன் தந்தையை வஞ்சித்திருக்கின்ருள் அவள், நின்னையும் அதுசெய்யலாம் [22].

[தலைவரும், செனட்சபை அங்கத்தினரும், உத்தியோகஸ்தர்களும் போகின்றனர்.]

ஒத்தே:—அவளதுஉண்மையின்மேல் என்உயிர்!-பொய்யில்லா இயாகோ, என் டெஸ்டிமோனவை நான் நின்பால் விடுதல் வேண்டும்; நின்மனைவியை அவளுக்கு ஏவல்புரியச் செய்திடுக. சிறந்த செவ்வியில் அவர்களைப் பின்னே அழைத்துவா. டெஸ்டிமோன, வா; காதலிற்கும், உலக காரியங்களுக்கும், ஏற்பாடுகளுக்கும் [23] உன்னொடுகழிக்க எனக்கிருப்பது ஒருமணி நேரம்; காலத்திற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.

[ஒத்தெல்லோவும் டெஸ்டிமோனவும் போகின்றனர்.]

விலும் ஷேக்ஸ்பியர் தன் கலைவண்ணங் காட்டுகின்ருர்.

(14) என்னுடைய மனத்தின்மேன்மையையே வியந்து என்னை அவள் காதலித்ததற்குஇணங்க, நானும் அவளது மனதிற்குரிய இன்பங்களையே அளவின்றி இயற்றியளிக்கும்பொருட்டே அவள் என்னுடன் வரமேண்டுமென்று ஆசைப்படுகின்றேன்.

(15) மனைவி உடன் இருப்பதுபற்றி நான் இப்போரிற்குரிய காரியங்களைக் கவனிக்காமல் இருந்துவிடுவேன் என்று அஞ்சாதீர் - என்பது பொருள்.

(16) க்யூபிட் - கிரேக்கர்களின் காமதேவன், இவன் சிறகுகள் உடையவனுக வருணிக்கப்படுவான்.

மென்சிறைப் பொம்மைகள், என்பது இங்கு, க்யூபிட் தூண்டுகின்ற காமலீலைகளைக் குறிக்கின்றது. விளையாட்டுப் பொருளாகிய பொம்மை என்பது பொதுவாக விளையாட்டையையே குறிக்கின்றது. மென்சிறைப்பொம்மை, கவலையின் பாரமற்ற உல்லாஸ விளையாட்டுக்கள்.

சிந்தனையின் உத்தியோகத்தின் கருவிகள் - சிந்திப்பதற்கும் செய்வதற்கும் உரிய கருவிகள் - மனதும் மெய்யும்.

விளையாட்டுடைய தாமத்தினுல் தைத்துவிடுதல்- விளையாட்டயர்ந்த தாமத குணத்தினுல் ஒடுக்கிவிடுதல். அக்காலத்தில், மேனுட்டவர், வல்லூறு என்னும் வலிய பறவையைப்பழக்கி அதனைக்கொண்டு சிறுபறவைகளைவேட்டையாடுவதுண்டு. அதனைப் பழக்கும்பொழுது, அதன் கண்களின் மேல்இமையையும் கீழ் இமையையும் தைத்துவிடுவார்கள். அப்பொழுதுதான் அப்பறவை தன்வசமற்றுப் பழக்குவோர்க்கு அடங்கினதாகப் பழகுமாம். வல்லூற்றுவேடர்கள் அதன் இமைகளைத் தைத்து அடக்கிவிடுவது போல், க்யூபிட்டின் பொம்மைகள், என்மனதை மழுக்கி, உடலைத் தளர்த்தித் தம்வசமாக்கிக்கொண்டுவிடுமானுல், அந்நாள் நான் மானமும் சீரும் அழிந்தவனுகின்றேன்- என்கின்ருன்.

(17) சீரா - போர்வீரர் தலையில் அணிந்துகொள்ளும் இருப்புக்கவசம். மனைவிமார் என்பது பொதுவாக மாதர்களை இங்குக் குறிக்கின்றது.

காமலீலைகளில் அறிவிழந்து நான் என் கடமையைச் செய்யாமற் கைவிடுவேனுயின், அப்புறம், என் சீராவைப் பெண்கள் சமையற் பாத்திரமாக உபயோகிக்கட்டும், என் கௌரவமெல்லாம் நாசமாய்ப் போகட்டும் - என்று சூளுரைக்கின்ருன்.

(18) விரைவுடன் இப்போர்க்காரியத்தைக் கைக்கொள்ளவேண்டு மாகையால் வேகமாகப் புறப்படவேண்டும்-என்பது பொருள்.

(19) நும் சித்தப்படியே, என் பதாகையாளனுகிய இயாகோவைப் பின்விட்டுச் செல்கின்றேன் - என்பது பொருள்.

(20) குறைவில்லை யெனின், என்பது இங்கு, குறைவில்லையாகையால், என்னும் குறிப்புடையது. நல் தகைமை - மேன்மையுடைய மனத்தின் மாண்பு. மகிழ்வுடை அழகு - மற்றவர்களை மகிழ்விக்கக்கூடிய அழகு.

மற்றவர்களை மகிழ்விக்குந்தன்மையில், குணத்தின் அழகானது முகத்தின் அழகைவிடக் குறைந்திருக்கவில்லையாகையால், நும்மருமகனுகிய ஒத்தெல்லோவின்கருநிறங் கண்ணிற்படுவதன்முன் அவன் குணத்தின் செம்மையே எல்லோர் மனத்தையும்மகிழ்விக்கக்கூடியதாக இருக்கின்றது - என்பது பொருள்.

(21), (22) பின் நிகழ்ச்சிகளைக் கருதுங்கால் இவ்விரண்டு வாசகங்களும் நிமித்தமுடைய வாய்ப்புள்கள் ஆகின்றன. அது செய்யலாம் - வஞ்சிக்கலாம்.

(23) உலககாரியம்-குடும்ப காரியங்கள்.

# வில்லி பாரதம்

## இராசராசன்— துரியோதனன்.

[142-வது பக்கத் தொடர்ச்சி]

### வீடுமனும் சுயோதனனும்

இனி, துரியோதனனுக்கும், அவன் பிதாமகனுக்கும் உள்ளமே நயமுறைமையைப்பற்றி ஆராய்வோம். வீடுமன் அவனுக்காகத் தன்ஆவி உடல்பொருள்நலனைத்தையும் அர்ப்பணஞ்செய்த ஏழையானவன் என்பதைமுன்னுண்டுஇதழ்களில் 'வீடுமன்' என்னும் கட்டுரையில் கூறினேன். அக்கட்டுரையைப் படித்த எனதுஉறவினர் ஒருவர்அதில்சில தடைகளைஎழுப்பினர். வீடுமன், என்றைக்குத்தனதுவாழ்க்கையின்பங்களைத் தியாகம் செய்துவிட்டு விசித்திரவீரியன் குடும்பத்துக்குப் பணிபூண்டனனே அன்றுமுதல் அவன் செஞ்சோற்றுக் கடன் கழிக்க நின்றவொரு



ஏவலாளனுதலின் அவனது செயல்கள் அவன்மனங்கொண்டாற்றியனவல்லவென்றும், அதனுல் அவனிடத்துக் குற்றம்காண்பது பொருந்ாதென்றுமவர் வாதித்தார். அதற்குமறுமொழியாக நான், இவனைப்போலவே செஞ்சோற்றுக்கடன் கழிக்கநின்ற கன்னன் புரிவதற்கு அஞ்சும் மறச்செயலை இவ்வீடுமன் சுயோதனனுக்காக ஏன் இயற்றவேண்டும் என்றும், தன்னைப்போலவே உறவினனுகி அரசனில்லில் உண்டியும் ஓதனமும் அருந்தும் விதுரன் திருதராட்டிரனுக்கு மதிகூறிப் புண்ணியமாக்குவதுபோல், அவ்விதுரனிலும் பன்மடங்கு மூத்தவனும், நன்மதிப்பு வாய்ந்தவனுமான வீடுமன் என் அரசனுக்கு மதி கூறவும் அஞ்சுகின்ருனெனவும், இவ்வாறு அச்சத்துடன் உழைக்கும் இந்தச் செம்மல், விதுரன் வில்லிறுத்தபோது மாத்திரம்,

......பகையை
எங்ஙனே தனிகொல் வெல்லுவாய்
பாரனைத்துமினி ஐவ ராளும்வகை
பண்ணு வித்தனை அழிந்ததுன்
பேரனைத்துமென உள்ள மூன்றுசில
பேசி னுனுயர் பிதாமகன்.

என்றபடி 'உள்ளமூன்று பேசுவானேன்' என்றும் கேட்டேன். 'உள்ளமூன்று பேசுவானேனென்ருல் அத்துரியோதனனும் பாண்டவர்களைப்போல் அவரது பேரன் தானே' என்ருர். அதற்கு மறுமொழி கூற நான் பெரிது யாதுமுயற்சி யெடுத்துக்கொள்ளவில்லை. அவர் கூறியதையே திருப்பிக் கேட்டேன். 'பாண்டவர்களும் துரியோதனனைப்போல் அவனது பேரன் மக்கள்தானே. ஆதலின் தருமத்தின் சார்பாக நின்ற அவர்கள் வெற்றியடைவதைப் பொருமல் பாரனைத்துமினி ஐவ ராளும்வகை பண்ணுவித்தனை என்று கூறுவானேன். துரியோதனன் அழிவதற்கு வருந்தினுல், "ஐயகோ என் கண்முன்னே என் பேரன்மார்களான நீவிருவரும் மண்டியிட்டுப் போரில் நீ வீழ்வதையும் பார்ப்பேனு" என்று உளம் நொந்திருந்தால் அது வேறுவழியாயிருக்கும். ஆனுல் தருமசொரூபியாகிய தருமன் வென்றிகொள்வதில் மனமழன்று, கைதவமன்றி வேறொன்று மறியாத சுயோதனனது பேரும் அழிந்ததென்று வருந்துவானென்ருல் அவனது மனப்பான்மை எத்தகையதாமென்று அறிந்துகொள்ள இயலாதா?' என்றேன்.

அதற்குஅவர், வடமொழி பாரதத்தில் சுயோதனனது அக்கிரமங்களைப் பற்றிப் பலவகையிலும் கண்டித்துப் பீஷ்மாசாரியார் கூறுகின்ருர் என்று வேறு விஷயத்தை எடுத்துக்கொண்டார். 'உடனே யானும், 'அஃதிருக்கலாம்; ஆயினும் வில்லிபாரதத்தைப் பொறுத்தவரையில் நாம் இது திண்ணமெனவும் கூறலாம். யாவதெனின், நமது பாரதத்தில் வீடுமன் வாக்காக அமைந்த பாக்களை எடுத்துக்கொண்டால் அவையாவும் ஒருமுகமான சான்றையே பகர்கின்றன. மாதைத் துகிலுரிந்தபொழுது அவன் பேசிய உரைகள் சுயோதனனைக் கண்டிப்பதாகுமா? தனது ஆண்மையின் பொருட்டும், அருளின் பொருட்டும், நியாயத்திற்காகவும், சுயோதனனது நன்மைக்காகவுமே, அவனைக் கண்டிக்கவேண்டிய அவ்விடத்தில் அவன் கூறியதெல்லாம்,

இன்னற் படுஞ்சொற் பாஞ்சாலி
இரக்கந் தனைக்கண் டிரக்கமுறா
மன்னற் கிளையோய் * தவறுரைத்தல்
வழக்கோ வடமீ னனையாளை
என்னக் கழறி யுரைத்த
வெல்லா மரசற் கியம்புதியென்
றன்னி மொழிந்தான் குருகுலத்தின்
முதலாம் வாய்மை மொழியானே.

என்னும் பாவில் அடங்கியுளது. மற்றைப்படி நச்சுப்பொய்கை முதலியசூதுகள் இயற்றியபொழுதாவது, ஏன்,முதலில் பாண்டவர்களைச் சூதாடற்கு அழைத்தபோதேனும், வீடுமன் ஒரு சொல்லேனும் பயின்ருனல்லன். உலூகன் தூது வந்தபோது அரசனது அக்கிரமத்தைக் கண்டித்தும் பாண்டவரது நேர்மையினைப் பற்றிப் பகராமல் 'கோடுமன்னுவில் அருச்சுனற் கெதிர் குனிக்கவல்லவர் எவர்' என்று, பகைவனது திறத்தையன்றே கூறுகிருன். அதன்பின் கண்ணன் தூது வந்தபோது சபையில் யாதும் விளம்பவில்லை. கண்ணன் புறப்பட்டுச் சென்றபின், அரசசபையில் கன்னனோடு வாதாடியபோது அருச்சுனனது பிரதாபங்களைப் பற்றிப் பறையடித்தானே யொழிய அரசனைச்சிறிதேனும் கடிந்துகூறினுனில்லை.நிறைமீட்சிச் சருக்கத்தில் இராசராசன் 'பாண்டவர்கள் தங்கள் காலத்திற்குமுன் தோற்றம்செய்தனராதலின் இவர்களை மீண்டும் வெங்கானம் ஏகச்சொல்' என்று கூறியதற்கு மாத்திரம், அவர்களை அன்னவாறே மீண்டு ஏகச்சொல்லிப் பாவத்தைத் தேடிக்கொள்ளாமல்

இன்னலே யுழந்தவர் காலம்
இந்துவின் இயக்கந் தன்னுல்
நென்னலே நேர்ந்த தென்ருன்
நெஞ்சினில் அழுக்கி லாதான்

என்று அவர்களது துன்பவாழ்க்கையைக்கண்டு மிக இரங்குகின்ருன். இவ்வாறு இவன் கூறியதும் பாண்டவர்தம் அதிட்டமே என்றும் கூறலாம். ஏனென்னின், சுவேதனைச் சூதினுல் மாய்த்தவனும், சுயோதனனது பேர் அழிவதைக்கண்டு ஆற்ருதவனும் ஆகிய வீடுமன், பாண்டவர்க்கிரங்கியதும், அவர்கள் தங்கள் காலத்திற்குமுன் தோற்றஞ்செய்தனர் அல்லர் என்று ஒத்துக்கொண்டதும் அவர்களது புண்ணியம்தானே? ஆனுல் இவ்வோரிடத்தைத் தவிர்த்து, எட்டாம்நாட் போரளவும் தன் வாழ்க்கையில் ஓரிடத்திலேனும் சுயோதனனது அதருமத்தைப் பற்றிக் கூருதிருப்பதையும்,

பாரனைத்துமினி ஐவ ராளும்வகை
பண்ணு வித்தனை அழிந்ததுன்
பேரனைத்துமென உள்ள மூன்றுசில

பேசியதையும் நோக்கினுல் கவிஞரது கருத்து நமக்கு நன்கு விளங்கவில்லையா? இந்தக்கவிஞர் உண்மையில் கொண்ட தென்னவென்பதைத் தக்க சான்றுகளினுல் கண்டுகொள்வதன்றி மற்றைப்படி ஒவ்வொரு விஷயங்களையும் அலசி ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியமென்ன?' வென்றேன். 'ஆனுல் வடமொழிப் பாரதமோ?' என்ருர்.

அதைப்பற்றி இப்பொழுதென்ன? வீடுமனுக்குக் கன்னனை இகழ்வதே சுபாவமாமென்று வடமொழியில் கூறியிருப்பதும், நமது பாரதத்தில் குற்றத்தைக் கன்னன் பங்கிற்றுனே அமைத்துக் கூறியிருப்பதும்,

* துச்சாதனன்.

தருமனுக்குச் சூதினில் மிகப் பற்றென்றும் அல்லவென்றும் இருமொழிகளிலும் முறைபெகூறியிருப்பதுமாகிய விஷயங்களை ஆராயும்போது இதையும் ஆராய்வேன்' என்றேன்.

"அப்படியாயின் வீடுமனைப்பற்றி உன் அபிப்பிராயம்தான் என்ன? அவன் சகுனி முதலியோரைப் போல் கொடியோர்கோட்டியில் சேர்ந்தவனு? இவனொரு மகாத்மாவன்றே?'' என்று மனம் தளர்ந்து கேட்டார்.

அவனது மாண்புடைக் குணங்களொன்றையும் நான் மறக்கவில்லை; அவனினும் அதிசய குணங்களொருவருக்கும் இல்லையென்றே கூறுவேன். எனினும் அவனுக்குச் சுயோதனனிடம் பாண்டவரிடத்தில்லாத ஒரு தனி அபிமானம் உண்டென்பதை மறக்கலாகாது. அப்பாசம் அவன் கண்ணை மறைப்பதனுல் சுயோதனனது குற்றங்களைப் பொருட்படுத்தாமல் அவனுக்குத் துன்பம் நேர்ந்தபோது யாத்திரம் மிகவும் மனக்கிலேச முறுகிறுன் என்றேன்.

'அதற்குக் காரணம் ?

'பாண்டவர் மாசுடைப் பிறப்புடையோராதலும் சுயோதனன் மாசிலாப் பிறப்புட்டையனுதலும் ஒரு காரணமாகலாம்' என்றேன்.

'அப்படியாயின் திருதராட்டிரன் பாண்டு முதலியோர் மாத்திரம் மாசிலாப்பிறப்புடையோர்தாமோ?

'உண்டு; நீர் சொல்வதுண்மையே; ஆயினும் பாண்டவரது மாசுடைப் பிறப்பைப்பற்றிப் பல தரமும் சுயோதனன் கூறுகிறுன். ஆனல் கண்ணனுவது கோபமிக் கூர்ந்தபோது, வீமனுவது அம்முநியோரது பிறப்புமுறைகளை விமரிசனம் செய்கின்றிலர், என்று கூறினேன்.

'ஆயின் வீடுமன் சுயோதனனிடம்வைத்த பாசத்துக்குக் காரணம் அதுவொன்றுதானே? அது ஒரு வலிய காரணம் தானே?' என்றுர். அக்காரணம் வலியதொன்றல்லவென்பதை ஒத்துக்கொண்டு நானும், 'ஒன்று நோக்குவோம்; வீடுமனுக்குச் சுயோதனன்மாட்டு உள்ள அன்டை நன்கு நிரூபித்தேனென்று நினைக்கின்றேன். இரண்டாவதாக அவனுக்குக் கிரீடியிடமும் நேயமும் தகவும் உண்டென்பதை நோக்கவேண்டும்' என்றேன்.

அதற்கவர், "கிரீடியிடம் அன்பு கொள்ளாதவர் யார்? துரோணர் விதுரர் முதற்கொண்டு யாவருந்தான் அவனிடம் அன்பும் மதிப்பும் வைத்திருந்தனர். வீடுமனுக்குமாத்திரம் சிறப்பாக அவனிடத்து இருந்த அன்பு என்ன?'' என்று மறுத்துக் கூறினுர்.

விதுரனுக்கு, பாண்டவரைவரினும் தருமனிடத்தே அளவில்லாத அன்பும்தகவும் இருந்ததென்றும், விசயனது வெற்றிகளை வெகுவாகக் கொண்டாடியவன் அல்லனென்றும், அவனது நேர்மையும், நியாயத்தின்கண் வைத்த நோக்கமும் தனிவிஷயமென்றும் கூறி, "நீர்சொல்வதொருபுறமிருக்க விசயன், சுயோதனன் இவ்விருவரிடமுமே வீமன் பரிவுவைத்திருந்தான் என்பதை நோக்கினுல் ஒரு கருத்துப்புலப்படவில்லையா?' என்ற ஒரு கேள்வியுடன் எனது பக்ஷத்தை விவரிக்கத் தொடங்கினேன்.

சிறுவயதில் தனது தம்பிக்குப் பலபோரியற்றித் தக்கபெண்களை மணம்செய்வித்துப் பல வரிசைளும் வழங்கியுமதைக்கொண்டாடுவதற்கில்லாமல் மணந்த சிறிது காலத்துக்கெல்லாம் விசித்திரவீரியன் இப்பூவுலகை நீத்தான். அவனது மக்கள் திருதராட்டிரன் அரசுக்கேலாத குருடனுகவும், பாண்டு இன்பங்களுக்கேலாதவொரு சாபம்பெற்றவனுகவும் முடிந்ததெல்லாம் வீடுமனுக்குக் குறைகளேயாயின. விரதம் முதலியன மேற்கொண்டானேனும், வீடுமன் ஒரு துறவியல்லனென்பதும், மனைவியைக் கொண்டு மக்களைப் பெற்று அவர்களிடம் நேசம்செய்யும் பேறு அவன் பெறுவிட்டானும், எல்லாமனிதர்வாழ்க்கைகளிலும் லக்ஷியமாய்த்தோன்றும், 'தான் அன்புசெய்வதற்கொன்று', 'தான் இவ்வுலகில் வாழ்ந்ததற்கு அறிகுறியாகத் தன் வமிசம் தன் கண்முன்னே தழைத்தோங்கக் காணுதல்' என்னும் உணர்ச்சிகள் ஆறுதல் அரிதேயென்பதை நாம் கருதவேண்டும். ஆதலின் சிறு வயதில் கணவனை யிழந்த மகளிர் பலர், கெட்டழியாமலிருப்பினும் தம்மைச்சார்ந்த சிலரை மக்களென்று ஏற்றுக்கொண்டாடுதல்இயல்பு. ஆதலின், அன்பென்னும் அவ்வுணர்ச்சியில்லாத கெட்டுப்போன யந்திர மனையவெற்றுத்துறவியாய்க்காலங்கழித்தவனல்லன் வீடுமன். வெற்றுத்துறவிக்கு அருள் என்பதில்லை. சிறந்த துறவியாயிருப்பவனது உள்ளம் அருளும் ஆனந்தமும் பொங்கிவழிவதாகும். ஆயின் வீடுமனிடம் காண்பது அருளோவெனின் அன்று. தொடர்புபற்றுது ஆருயிர்கட்கெல்லாம் செய்யும் அன்பாகிய அருளன்று. அது தன்னைச் சார்ந்தோர்க்குச் செய்கின்ற இல்லற அன்பு. தியாகம் நிறைந்ததெனினும் அது இல்லற அன்பேயாகும் *. நிற்க, இவ்வாறு தனது சந்ததிகள் இரண்டுதலைமுறைக்குப் பாழாய்ப்போகவும் மூன்றும்தலைமுறையிற் கண்ட சிறுவர்கள், 'மூக்கும் விழியுமாய், அத்தனைபேரும் அவனுக்கு எத்துணை மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கவேண்டும் ? ஆயினும் அத்தனை பேரிலும் ஒரு சமமான அன்பு பாராட்டுதல் இயலாது. ஒரு தாய்க்குத் தன் வயிற்றில் பிறக்கும் மக்கள் அனைவரிடத்தும் சமமாக அன்புசெய்ய இயலாதெனின் வேறு கூறுவானேன். ஆதலின் தன் கண்முன், மனங்களிக்க, விளையாடும் அத்தனை மக்களிலும் அழகினுலும், ஆட்டத்தினுலும், பேச்சினுலும் யாவரினும் தலைசிறந்து விளங்கும் சுயோதனனும், கிரீடியும் அவனது வாழ்க்கை யளவும் நீடித்த பாந்தத்திற்கு ஆளாயினர் என்பதுதான் பொருள். அவ்விருவரில் அழகிலும் ஆட்டத்திலும் மிகுந்தவன் விசயன், அழகிலும் பேச்சிலும் மிகுந்தவன் சுயோதனன். விசயன் தனது அழகினுல் பல மாதர்களைக் கவர்வதுபோலவே சுயோதனனும் மாதர்நெஞ்சைக் கவர்கின்றுனென்பதைப் பாஞ்சாலக் கன்னிகைகள் கூறுவதினின்றும் அறிந்து கொள்ளலாம்.

ஏற்றம் தன்னில் நிகரொருவர்
இப்பேருலகில் இலரென்னத்
தோற்றம் படைத்தோன் தனைக்காட்டித்
துரியோ தனன்மற் றிவனென்றுர்.

போரரங்கத்தில் விசயனது விற்றிறல் நன்கு விளங்கியதுபோலவே சுயோதனனது பேச்சு வன்மையும் நன்கு தோன்றலாயிற்று. விசித்திரவீரியனைப் போல் வீரம் தோன்றுமுன், இன்பங்கள் துய்ப்பதன்முன், இறந்துபடாமல், சுயோதனன் இவ்வுலகைத் தனிக்குடைக்கீழ் ஆண்ட வைபவமும், கிரீடி தன் விற்றிறலினுல் மூவுலகங்களினும் பெற்ற பெருமையும் அவனது உள்ளத்தை நிரப்பியது. அதனுல் தருமராசனது அறவொளியின் மாண்புக்கு அவனது உள்ளத்தில் இடமில்லைபோலும்!

அதனுல்தான் வீடுமன் தருமராசனது அறமாண்பினைப்பற்றி மிகுதியும் கூருமல் கிரீடியையே மிகுதியும் புகழ்கிறுன்.

திசைய னைத்தையும் வளைந்த தானவரை
இரவி வந்ததொரு திசையின் வாய்
நிசியெ னப்பொருது வான வர்க்கர
சளித்து வந்தவிறல் நீர்மையான்

* இவ்விடத்தில், அன்பு அருள் என்னுங் குறள் அதிகாரங்கள் இரண்டிற்கும் பரிமேலழகர் அமைத்துள்ள தோற்றுவாயில் கூறிய கருத்துக்கள் நினைவுக்கு வரலம். அவர் கூறியுள்ள கருத்துக்களைச் சிறிதேனும் மாற்றமின்றி உட்கொண்டே, தருமனது அருட்குணத்தைப்பற்றி, 'அது ஞானத்துறவியின் அருள்' என்று முன்னர்க் கூறினேன்.



விசய னுக்குநிகர் நீகொ லோகடவுள்
வெண்ம திக்குநிகர் வெள்ளியோ
வசையில் விற்றொழிலும் வல்லை யோவென
வோரா சைவிலாதவன் அறைந்தனன்.

என்று விசயனைப்பற்றிக் கூறியது ஒருதரம் அல்ல. கடைசியில் தான் பட்டபோது விசயனதுவாளி தன் மெய்யினுருவியதைப்பற்றி ஆக்லாதம்கொண்டதைக் கவிஞர்,

தோளுநெஞ்சமும் சிரமுமார்பமும்
தொடங்கிநிலைதொ றும்வந்துவந் துருவவே
சாளரங்கொளங் கவழியோடுகின்ற
விந்துமுகசா யகம்கைகொண்டு பிடியா
நாளறிந்தெதிர்ந்து பொருவோனுமைந்த
னன்றுமுதனு மமும்சிகண்டி யிவனெய்
வாளியொன்றுமிங் கெமையுறுதனஞ்
செயன்செய்பெரு வாழ்விதேன்று மகிழா.

என்று வருணிக்கிறுர். கடைசியில் சரவணையில் படுத்திருந்தபோது வேறெருவர்மாட்டும் செல்லாத ஞாபகம் கிரீடியினிடத்தே சென்றது.

சரத்தின் சயனம் பஞ்ச
சயனங்களினும் இனிதென்
சிரத்தின் தாழ்வு தீர்ப்பாய்
திண்டோள் விசயா வென்னக்

கூறுகின்றுர். இவைகளையெல்லாம் நோக்குமிடத்து, மூன்றும்நாட்போரில் வீடுமன் தீவிரயுணர்ச்சியுற்றுப் போர்புரிந்தபோது,

அலையத் தரங்கம் எறிகடல்வாய்
வடவா னலம்போல் அவனின்ற
நிலைமைக் கண்டும் காளுன்போல்

நின்ற அவ்விசயனது நிலையின் மர்மமும் விளங்கும். தங்கள் இருவர் மேலும் வீடுமன் வைத்தபரிவு இருவருக்கும் தெரியும். தன்னிடமும் பாசம் வைத்தவனேனும் சுயோதனனுக்கு ஆபத்துவந்தபோது, 'எப்படியும் அவனுள்ளம் சுயோதனனிடத்தில்தான் இருக்கிறது' என்ற எண்ணத்தினுல் விசயன் பெருமூச்செறிந்து வாளாவிருந்தானென்றே கொள்ளத்தகும். ஏனெனில், வீடுமனது வீரத்தினுல், ஒருவருக்கும் கலங்காத விசயன் கலங்கினுனென்று கூறுவதினும், மேற்கூறிய கருத்தே பொருந்து மென்று எண்ணுகின்றேன் என்று பல கூறியதும், நான் கூறியதிலும் உண்மை யுளதேன்று ஒத்துக்கொண்டார் அவர் *.

* 'கர்ணன் மாண்பு' என்னும் என் வியாசத்தைக் கண்ணுற்ற அவரே 'என்ன, உனக்குக் கன்னனைக் கண்டால் சிறிதேனும் ஆசவில்லையோ ?' என்று கேட்டார்.

# அணியிலக்கணம்

[118-வது பக்கத் தொடர்ச்சி]

## 2. தன்மையணி

[ஸ்வபாவோக்தி யலங்காரம்]

முன்னே கூறிய முறைகளுக்கிணங்க, அழகிய ஒன்றன் தன்மையை உள்ளபடியே அழகுற வருணிப்பது தன்மையணியாகும். வருணிக்கப்படுவது உயரியவோர்விஷயமா யிருக்கவேண்டுமென்றும், அவ்வருணனை, மிகையுங் குறையுமின்றி அவ்விஷயத்தின் இயற்கையை அவ்வியற்கையளவே அமைத்திருப்பதோடு, கேட்போர் மனம் வியந்துவக்கும்படி விசித்திரமாகவும் தோன்றவேண்டுமென்றும் இவ்வணிக்கேற்பட்டுள்ள கட்டளையைக் கருதுட்கொள்ளுங்கால், அமைப்பதற்கும் அறிவதற்கும் எளியது போல் தோன்றுகின்ற இவ்வணி உண்மையில் எத்துணைக் கலைத்திறமையைத் தன்னுள் அடக்கிக்கொண்டிருக்கின்றது என்பது தெரியவரும். கூறப்படும் அவ்வியற்கை உயரியதும் அழகியதுமாக இருப்பதுடன், அதிநுட்பமாகவும், அந்நுட்பத்தைப் புலமையோர் தம் மதியினுல் நுனித்துரைக்கப் பெற்றதாகவும் இருக்கவேண்டு மென்று "காவ்யா தர்ப்பணம்'' என்னும் வடமொழி அணிநூல் கூறும். இத்தகைய சிறப்புவாய்ந்த செய்யுள்கள் எந்த இலக்கியத்திலும் மிகச் சிலவே இருக்கக்கூடும். அவ்வியற்கையை நுனித்துரைப்பதற்கு வேண்டிய அளவு மதிநுட்பமும் அனுபவமும், உரைத்த பின்னும், அதன் உண்மையை அறிந்துகொள்ள விரும்புகின்றவர்களுக்கு அவசியமாம். நுட்பமாக ஒன்றன் இயற்கையைத் தேர்ந்துரைக்கும் திறமை திருக்குறளிற் சில விடங்களிற் காணப்படும்.

சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு

[கல்வி குணம் அறிவு முதலியவைகளால் பெரியோரை நாடியடைந்து, அவருடையநட்பையும் உறவையும் பெற்றுக்கொள்வோம் என்னும் எண்ணம் சிறியோர் மனத்தில் ஒருபோதும் உண்டாகாது.]

பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து

[பெருமை யுடையோர் எப்பொழுதும் பணிவும் அடக்கமும் பூண்டு ஒழுகுவார். சிறியோர், தம்மை வியந்து புகழ்ந்துகொண்ட வண்ணமா யிருப்பார்.]

மக்களே போல்வர் கயவ ரவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.

[கயவர்களும், வடிவம் உறுப்பு முதலியவைகளால் மனிதரே போன்று இருக்கின்றனர். வேறு வேறு சாதியைச் சேர்ந்த இரண்டு வெளிப்பார்வைக்கு ஒன்றேபோல் ஒத்துத் தோன்றுவது இதனைப் போல் வேறு எந்த இரண்டு சாதியிடத்தும் யாம் கண்டதில்லை.]

அச்சமே கீழ்கள தாசார மெச்சம்
அவாவுண்டே லுண்டாஞ் சிறிது.

[கீழ்மக்களிடத்தில் எப்பொழுதேனும் சிறிது ஆசாரம் காணப்படுமாயின், அதற்கு அச்சமே காரணமாயிருக்கும். அச்சமில்லாவிடில், தாம் விரும்புகின்ற ஒன்று அவ்வாசாரத்தால் கைகூடலாம் என்று தோன்றினுல், அதுபற்றியுமவர் சிறிது ஆசாரமாக இருக்கலாம்.]

எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

['உரிமை உரிமை' என்று ஆரவாரஞ் செய்கின்ற கீழ்மக்கள், அந்தத்தில், சமயம் நேருமானுல் தம்மையே மிக விரைந்து விற்றுக்கொள்வதற்கன்றி, வேறு எதற்கு உரியவர்களாக இருக்கின்றனர்.]

இக்குறள்கள் மிக ஆழமும் அகலமும் முதிர்ச்சியும் வாய்ந்த அனுபவத்தின் பயனுய் எழுந்து, கயவரது இயற்கையை நுண்ணிதின் ஆராய்ந்து இணையற்ற சொற்களால் உண்மையுற உரைக்கின்றன. எனின்,

எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்
சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்.

என்று தண்டியாசிரியர் வகுத்துள்ள இலக்கணத்திற்கு இவை மிகச் சிறந்த உதாரணங்கள் ஆகும். இவைகளில் அமைந்திருக்கின்ற தன்மை நவிற்சியணியின் நுட்பம், கற்கக்கற்கக் கைவந்து பெருகும்.

நவிறொறு நூனயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

[நற்குண முடையவர்களுடன் செய்துகொண்ட நட்பானது, நூற்பொருள் கற்கக்கற்க நயம் மிகுந்து இன்பம் செய்வது போல, பயிலப் பயில வளர்ந்து இன்பம் செய்யும்.]

என்று திருவள்ளுவர் கூறியிருப்பது, உயரிய நூலின் இயற்கையும் நட்பின் இயற்கையும் சாற்றுமாற்றால் இவ்வணிக்கு உதாரணமாவதுடன் இத்தகைய கருத்துக்களைத் தேர்வதன் அருமையையும் எடுத்துக்காட்டுகின்றது. கீழோர் இயற்கையே இச்செய்யுள்களில் கூறப்பட்டிருந்தாலும், இதற்கு மாறாய இயற்கையுடையவர் மேலோர் என்பது குறிக்கப்படுவதால் மாறனலங்காரத்துடன் மாறுபடாமலே இவைகளைத் தன்மையணியுள் கொள்ளலாம்.

இதுகாறும் தன்மைநவிற்சியணியைப் பற்றிய சிற்சில விஷயங்களைப் பொதுவாகக் கருதினோம். இனி இவ்வணியின் பகுதிகளைக் கருத்துட்கொள்ளலாம். பொருள் குணம் சாதி தொழில் என்னும் இவை நான்கையும் தனக்கு நிலைக்களமாகக்கொண்டு இவ்வணி பிறக்குமென்று தண்டியாசிரியர் கூறுகின்றார். எனவே, இப்பாகுபாட்டின்படி, தன்மை நவிற்சியானது, (1) பொருட்டன்மை நவிற்சியணியென்றும் (2) குணத்தன்மை நவிற்சியணியென்றும் (3) சாதித்தன்மை நவிற்சியணியென்றும் (4) தொழிற்றன்மை நவிற்சியணியென்றும், நான்குவகைப்படும். தண்டியாசிரியரைத் தழுவி நடக்கின்ற இலக்கணவிளக்கமும், வீரசோழியமும் இந்தப் பாகுபாட்டையே ஏற்றுக்கொண்டிருக்கின்றன. பொருட்டன்மை என்பதற்குப் பதிலாகத் திரப்பியத்தன்மை என்னும் பெயர் தந்திருக்கின்றது வீரசோழியம். மற்று, இந்நான்கு வகைகளையும் ஒன்றினின்று ஒன்றினை முற்றிலும் வேறுபடுத்தி வரையறுத்த இலக்கணங்கூறுவது அருமையாயிருக்கின்றது. எனினும், வீரசோழியத்தின் உரையில் இப்பாகுபாட்டின் இலக்கணமும் ஒருவாறுரைக்கப்பெற்று இருப்பதால், அதனைப் பின்பற்றுவோம்.

A. பொருட்டன்மை:—

உயரிய ஒரு பொருளின் உருவத்தை உள்ளவாறே சொன்முறைதொடுத்து வருணிப்பது பொருட்டன்மை நவிற்சியணியாகும். (பொருள்-திரவியம்).

கறைமிடற்றர் கையிற் கபாலத்தர் வெள்ளைப்
பிறைமுடியர் பின்றாழ் சடையர்-பொறிவிரவு
நாகத்தர் சூலத்தர் நன்னுதலா டானிருந்த
பாகத்த ரென்றே பரசு.

[விஷத்தைக் கழுத்தில் அடக்கியிருப்பவர், கையில் கபாலத்தை ஏந்தியிருப்பவர், வெண்மையான பிறைச்சந்திரனை முடியில் தரித்திருப்பவர், பின்னே தாழ்ந்து புரள்கின்ற சடையையுடையவர், புள்ளிகள் கலந்திருக்கின்ற பாம்புகளை அணிந்திருப்பவர், சூலத்தைக் கைக்கொண்டவர், அழகியநெற்றியையுடைய உமாதேவி இருக்கின்ற பாகத்தை யுடையவர், என்றே சிவபிரானைத் துதிப்பாயாக.]

சிவபிரானது உருவத்தின் தோற்றம் உள்ளபடியே சொன்னடைச்சுவையினோடு வருணிக்கப்பட்டிருப்பதாம் இது பொருட்டன்மை நவிற்சியணியாகும். அவ்வாறே,

நீல மணிமிடற்ற னீண்ட சடைமுடியன்
நூலணிந்த மார்ப னுதல்விழியன்-றோலுடையன்
கைம்மான் மறியன் கனல்மழுவன் கச்சாலை
எம்மா னிமையோர்க் கிறை

[நீலநிறமுடைய கழுத்தையுடையவன், நீண்ட சடைமுடியுடையவன், பூணூல் அணிந்த மார்பையுடையவன், நெற்றியில் கண்ணுடையவன், தோலைஉடையாகத்தரித்தவன், கைகளில் மானையும் எரிகின்ற மழுவாயுதத்தையுங் கொண்டவன் ஆகி, கச்சாலைஎன்னும்பதியில் எழுந்தருளியுள்ள எம்மை ஆட்கொண்ட பெரியோனே தேவர்களுக்குத் தலைவன்]

என்பதும், பொருட்டன்மை நவிற்சியணியாகும். இதற்கு இலக்கணமாக,

உருப்பெறக் கிடந்த வுண்மைசால் மரபிற்
றிரப்பியம் பகர்வது திரப்பியத் தன்மை

என்னும் அடிகள் வீரசோழிய உரையில் காணப்படுகின்றன. கம்பர் குகப்பெருமானை வருணித்திருக்கின்ற பாசுரங்கள் சில இப்பொருட்டன்மை நவிற்சியணிக்கு நல்ல உதாரணங்களாயமையும்:—

காழ மிட்ட குறங்கினன் கங்கையின்
ஆழ மிட்ட நெடுமையி னுரைத்
தாழ விட்ட செந்தோலன் றயங்குறச்
சூழ விட்ட தொடுபுலி வாலினன்

[சல்லடம் அணிந்த துடையையுடையவன், கங்காநதியின் ஆழத்தை அளந்தறியக்கூடிய உயரமுடையவன், இடுப்பிலிருந்து தொங்கவிட்ட சிவந்த தோலையுடையவன், விளங்கும்படி இடுப்பில் தொடுத்துக் கட்டிய புலிவாலை யுடையவன்]

பற்றொடுத் தன்ன பல்சூற் கவடியன்
கற்றொடுத் தன்ன போலுங் கழலினன்
அற்றொடுத் தன்ன குஞ்சியி னுள்கதிர்
நெற்றொ டுத்து நெரிந்த புருவத்தான்

[பற்களைச் சேர்த்துத் தொடுத்ததுபோன்ற உட்டுளையுள்ள பலகறைகளாலாகிய மாலையை அணிந்தவன், கற்களைப் பொருத்திவைத்ததுபோன்ற கழல்களை யணிந்தவன், இருளை ஒன்றாகச்சேர்த்துக் கட்டியதுபோன்றமயிர் முடியில் நெற்கதிரைச் செருகிக்கொண்டு நெரித்தபுருவத்தை யுடையவன்]

பெண்ணை வன்செறும் பிற்பிறங் கிச்செறி
வண்ண வன்மயிர் வார்ந்துயர் முன்கையன்
கண்ண கன்றட மார்பெனுங் கல்லினன்
எண்ணெ யுண்ட விருள்புரை மேனியன்

[பனைமரத்தின் வலிய சிறும்புபோல் விளங்கி நெருங்கியுள்ள அழகிய வலிய மயிர் நீண்டு உயர்ந்து தோன்றுகிற முன்னங் கையை யுடைவன், இடமகன்ற விசாலமான மார்பு என்கின்ற கல்லை யுடையவன், எண்ணெய்பூசிய இருளை யொத்த உடம்பை யுடையவன்]

கச்சொ டார்த்த கறைக்கதிர் வாளினன்
நச்ச ராவு நடுக்குறு நோக்கினன்
பிச்ச ரமன்ன பேச்சின னிந்திரன்
வச்சி ராயுதம் போலு மருங்கினன்

[அரைக்கச்சிற் கட்டிய இரத்தக்கறை படிந்த ஒளி பொருந்திய வாளை யுடையவன், விஷமுடைய பாம்பும் நடுங்கும்படி கொடிய பார்வை யுடையவன், பித்தரைப் போலப் பேசும் பேச்சுடையவன், இந்திரனது வச்சிராயுதம் போன்று இறுகிய இடுப்பை யுடையவன்]

ஊற்ற மேமிக வூனொடு மீனுகர்
நாற்ற மேய நகையின் முகத்தினன்
சீற்ற மின்றியுந் தீயெழ நோக்குவான்
கூற்ற மஞ்சக் குமிறுங் குரலினன்

[தன் வலிமையும்ஊக்கமும்மிகுமாறு மாமிசமும்மீனும் புசித்தலால் புலால் நாற்றம் பொருந்திய சிரிப்பில்லாத முகத்தை யுடையவன், கோபம் இல்லாத வேளையிலும் தீப்பொறி பறக்கும்படி விழிக்கும் கண்களை யுடையவன், யமனும் அஞ்சும்படி குமிறுகின்ற குரலை யுடையவன்]

இவை, குகன் என்னும் ஒரு வேட்டுவ அரசனது வடிவத்மைத உள்ளபடியும், நம் கண்முன் தோன்றுவது போலவும் வருணித்திருக்கின்றன. குரல்பேச்சு முதலிய கூறப்பட்டிருப்பினும், இவை வடிவம் அல்லது உருவம் என்னும் சொல்லில் அடங்காவாயினும், பெரும் பகுதி அவன் தோற்றமே இவ்வருணனைக்கு விஷயமாயிருப்பதால், இதனைப் பொருட்டன்மைநவிற்சியணியென்று கொள்வதுபிழையாகாது. உவமை, உயர்வுநவிற்சி முதலிய அணிகள் இவ்வருணனையில் கலந்து வந்திருக்கின்றன, என்பது உண்மையே, ஆயினும், தன்மைநவிற்சியே மிகுந்திருத்தலாலும், மற்றவை அதற்கு உபகாரமாகுமளவிற்றானே நிற்பதாலும், இவ்வருணனையைத் தன்மைநவிற்சியணி எனக் கொள்ளல் தகும்.



# சூரியன்

## III. நக்ஷத்திரசாலை
### (அமைப்பும், நடைமுறையும்)

[134-வது பக்கத் தொடர்ச்சி]

ஒளியின் இயல்பு:—தூரதிருஷ்டிக் கண்ணாடியின அமைப்பு எத்தன்மையதென்று ஆராயப்புகுவதற்கு முன், ஒளியின் சிறப்பியல்புகளை அறிந்துகொள்வது அத்தியாவசியமாகும்.

(i) ஒளியின் கதிர் எப்பொழுதும் நேர்க்கோடாகவே சென்று பாய்கிறது. அதனால் ஒரு சிறிய குடையைக் கொண்டு இப்பெரிய சூரியனை மறைக்க இயல்கின்றது. வளைந்து பாய்வதாக இருந்தால், சூரியனுடைய கதிர்கள் குடையின் கீழாக வளைந்து திரும்பி நம் முகத்தில் தாக்கும் அன்றோ? நேரே பாயும் இவ்வியல்பினை விஞ்ஞான சாஸ்திரிகள் ஒளியின் முதற் குணம் என்று கூறுவர்.

(ii) ஒளியின்கதிர், பாதரசம் போன்று அடிப்புறம் இருண்டு மேற்புறம் துலங்குகின்ற பரப்பின் மீது தாக்குமாயின், அக்கதிர் அப்பரப்பில் பிரதிபிம்பிக்கின்றது. இத்தகைய பரப்புக்களை, அடுத்தது காட்டும் பளிங்குகள் என்றும், உருக்காட்டிகள் (Mirrors) என்றும், கூறுவர். இவ்வுருக் காட்டிகள் இருவகை. தட்டையாகஇருப்பன ஒருவகை. இவையே நமது இல்லங்களில் நாம் முகம்பார்க்க உபயோகிக்கும் உருக்காட்டிகள். இவைகளில் காணப்படும் உருவம் உண்மையானவையல்ல; வெறும் பாவனையேயாம். (Virtual images) உண்மையான தோற்றமாயின் அதை நாம் ஒரு திரையின்மீது வீழ்த்திக் காட்டுதல் கூடும். அவ்வாறு பிடித்துக்காட்ட முடியாமையின் "கடங்கடந் தோறும் கதிரவன் தோன்றில், அடங்கிட மூடில் அவற்றில் அடங்கான்" என்ற கதைப்படி, இவையும் அடங்காது தோன்றும் வெறும் தோற்றங்களேயாம். ஆகையால், இவ்வுருக்காட்டிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குப் பயன்படா. மற்றொருவகை உருக்காட்டிகள் தட்டையாக அல்லாமல் வளைவாக இருப்பவை. இவை உள் வளைவு வில்லை (Concave mirror) என்றும் வெளி வளைவு வில்லை (Convex mirror) என்றும் இரண்டு வகையாகிப் பின்னும் ஒருபுற உள் வளைவு வில்லைகள், இருபுற உள் வளைவு வில்லைகள், ஒருபுற வெளி வளைவு வில்லைகள், இருபுற வெளி வளைவு வில்லைகள் என்று பலவகையாக வழங்குகின்றன. உள்வளைவு வில்லையிலே, ஒளிக்கதிர்க்கற்றை (bundle of rays) தாக்குமாயின், இக்கதிர்கள் தோன்றிவரும் மூலப் பொருளின் (Source) உருவம், இவ்வில்லையின் கதிர்குவி முனையிலே, கிரண மையத் தண்டு (Focus) மிகச் சிறியதாகவும், தலைகீழாகவும் (Inverted) தோன்றும். இவ்வடிவத்தை ஒரு திரையின் மீது வீழ்த்திக் காட்டுதல் கூடும். இந்தப் பிரதிபிம்ப இயல்பே, ஒளியின் இரண்டாவது குணமாகும்.

(iii) ஒளி வளைதல் மூன்றாவது குணமாகும் ஒளியின் கதிர், ஒளித்தடைப் பொருள்மீது அல்லாது பளிங்குபோன்ற ஒளி நுழை பொருளின்மீது (Transparent Substance) தாக்குமாயின், அவ்வொளி அப்பொருளில் ஊடுருவிச் செல்லும். அவ்வாறு செல்லுகையில், தாக்கின வழியே நேர்க்கோடாகச் செல்லாது, சிறிது வழி விலகிச் செல்லுமே யொழிய (Lateral displacement) ஒளி மழுங்கியோ, ஒளி மாறியோ போவதில்லை. இதனால்தான் சூரியவெளிச்சத்தை அவாவுடன் எதிர்பார்க்கின்ற குளிர்ச்சி மிகுந்த மேல்நாடுகளிலே, கதவுகளை, சூரிய வெளிச்சத்தைமிக விரும்பாத நம்மைப்போல, ஒளித்தடைப் பொருள்களைக் கொண்டு செய்யாமல், ஒளிநுழை பொருளான பளிங்கினாற் செய்து உபயோகிக்கின்றார்கள். இத்தன்மையதான சாதாரண பளிங்குகளும் தூரதிருஷ்டிக் கண்ணாடிக்குப் பயன்படா. மேலும் கீழும் வெளிப்புறமாக வளைந்து தோன்றி விளங்கும் பளிங்கை விஞ்ஞான சாஸ்திரிகள் இருபுறவெளிவளைவு வில்லை (Double Convex lens) என வழங்குகின்றனர். இதனை ஒளிவட்டவில்லை என நாம்வழங்குவோம். இவ் வொளிவட்ட வில்லையின் மீது ஒளிக்கதிர்கள் தாக்குமாயின், தாய்ப்பொருளின் உருவம் மிகச்சிறிதாகவும் தலைகீழாகவும் தோன்றக் காண்போம். உள்வளைவு வில்லையிலோ இவ்வுருவம் வெளிச்சம் தாக்கிய இடத்தேயே தோன்றக் கண்டோம். ஆனால், இந்த இருபுற உள்வளைவு வில்லையிலோ, தாக்கியவிடத்தில் அல்லாமல், அதற்குப் பின்னே எதிர்ப்புறத்திலே இவ் வுருவத்தைக் காண்கிறோம். இவ் வொளிவட்டவில்லை ஒளியைத் தன்னுள்ளே ஊடுருவிச் செல்லவிடுவதால், இவ்வுருவமும் உள்ளே ஊடுருவிச் சென்று பின்புறத்தே தோன்றுகின்றது. இவ் வொளிவட்ட வில்லைகளே தூரதிருஷ்டிக் கண்ணாடி செய்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

இருவகை வில்லைகள்:—ஒளிக்கொள்கையின்படி, உள் வளைவு வில்லைகளும், இருபுற வெளி வளைவு வில்லைகளும், தலைகீழாக உருவத்தைக் காட்டுவதில் ஒத்திருந்தாலும், அவற்றால் உண்டாகும் தோற்றங்களில் பலவகை வேற்றுமைகளைக் காண்கின்றோம். பொருட் செலவை நோக்குகையில் ஒரு அடி குறுக்களவுள்ள உள்வளைவு வில்லையின் விலை ஒன்று என்றால், அதே அளவுள்ள இருபுற வெளி வளைவு வில்லையாம் ஒளிவட்ட வில்லையின் விலை, ஐம்பது ஆக உயர்ந்து இருக்கின்றது. ஒளிவட்ட வில்லைக்கென்று மிகச் சிறந்த பளிங்கைத் தேடவேண்டும். அதிலே செய்ய வேண்டிய வேலைப்பாடுகளோ மிக அதிகம். எடையிலும் ஒளி வட்டவில்லையே நிறைமிக்கு இருக்கின்றது. ஆகையால், ஆராய்ச்சியாளர்கள், தத்தம் ஆராய்ச்சிக்கும் வசதிக்கும் தக்கவாறு இவ்விரண்டில் வேண்டியதொன்றைக் கைக்கொள்வர்.

தூர திருஷ்டிக் கண்ணாடியின் வகை:—ககோள ஆராய்ச்சிக்குப் பயன்படும் தூரதிருஷ்டிக் கண்ணாடிகள் இருவகை. பளிங்கினால் செய்த இருபுற வெளி வளைவு வில்லை, தூரத்தில் தனக்கெதிரே உள்ள பொருளினின்று வரும் ஒளியை வளையச் செய்து, ஒருமுகமாகக் குவித்து, ஒரு சிறிய உருவாக்கிக் காட்டும். இச்சிறிய உருவத்திற்கு மறுபக்கத்திலே, இவ் வொளிவட்டவில்லைக்கு எதிரே, மற்றொரு வில்லையை வைப்போமானால், முன்பு கண்ட அச்சிறு உருவமானது, இப்புதிய வில்லையின் வழியே மிகப் பெரிதாகித் தோன்றும். இதுதான் பூதக்கண்ணாடியின் அடிப்படையான தத்துவம். இவ்வாறு இவ்விரண்டு ஒளிவட்ட வில்லைகளையும் பிணைத்த கருவியை, ஒளிவளைவு தூர திருஷ்டிக் கண்ணாடி என வழங்கி வருகின்றனர் (Refracting telescope). இஃதே, கலிலியோவினிட மிருந்த தூர திருஷ்டிக் கண்ணாடி. இத்தகைய பளிங்குச் சில்லுகள், அல்லது கண்ணாடி வில்லைகளைச் செய்யப் பணச்செலவும் மெய் வருத்தமும் அதிகமாகும். அன்றியும், இத்தகைய தூரதிருஷ்டிக் கண்ணாடிகளினாலே பலவகையான பிரதிகூலங்களும் நேர்ந்தது கண்டு, நியூடன் (Sir Isaac Newton) என்ற ஆங்கில விஞ்ஞான சாஸ்திரி, பதினெட்டாம் நூற்றாண்டிலேயே, பிரதிபிம்ப தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்து, அதன் வழியே ஆராய்ச்சி செய்துவந்தார். ஈதே இரண்டாவது வகையான தூரதிருஷ்டிக்கண்ணாடி (Reflecting Telescope).

ஈட
ம211,N28KN
N35.2.ல
199208

REG. NO. M. 2324.

## வர்த்தமானம்

தெய்வீகச் சிறுவன்:—தென் ஆப்ரிக்காவில் தெய்வீக சக்தியுடைய சிறுவன் ஒருவன் இருக்கின்றான். இச்சிறுவனின் தகப்பனார் தண்ணீருக்காக ஓரிடத்தில் கிணறு வெட்டப்போனார். சிறுவன் அந்த இடத்தில் வெட்டினால் தண்ணீர் வராதென்று சொன்னதைப் பொருட்படுத்தாமல் தகப்பன் தான் தோண்டிய இடத்திலேயே ஆழமாக வெட்டிக்கொண்டிருந்தான். எவ்வளவு சிரமப்பட்டும் தண்ணீர் வரவேயில்லை. முடிவில் இந்த ஐந்தே வயதுடை தெய்வீகச் சிறுவன் காட்டிய இடத்தில் தோண்டியபோது சிரமமில்லாமலே சீக்கிரம் தண்ணீர் வந்துவிட்டது. பிறகு தகப்பன் தன் தவறை உணர்ந்து தன் மகனின் திறமையைக் கண்டு வியந்தான். இச்சிறுவன் இன்னும் அநேக தெய்வீகத் திருவிளையாடல்கள் புரிந்துவருகின்றானும்.

*   *   *

**சக்ரவர்த்தியின் பேர்த்தி சமயற்காரி:**—மூன்றாவது நெப்போலியன் சக்ரவர்த்தியின் பேர்த்தி இன்று பாரிசில் சமையற்காரியாக இருக்கின்றாள். அவள் பெயர் ஹெலன் டார்க்ஸ் என்பதாகும். அவள் வயது 28. அவள் தங்கை பொருத்தி போர்டியோவில் ஒரு தொப்பி செய்யும் தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறாள். ஹெலன் டார்க்ஸை இன்னாளென அறிந்த ஒருவர் அவள் நிலை கண்டு வியந்தபோது "என்னுடைய இப்போதைய வாழ்க்கை எனக்கு இன்ப மளிக்கவல்லதா யிருக்கிறது. நான் விரும்புவதெல்லாம் அமைதியா யிருக்கவேண்டு மென்பதேயாகும். அப்படியிருக்க ஜனங்கள் நாம் இன்னாரென்பதை அறிந்து கொள்வதால் ஏற்படும் நன்மை என்ன?" என்று கேட்டாராம்.

உடம்பை மூடுவது எதுவானாலும் அதுவே உடை என்று அநேகர் எண்ணிவிடுவது போல, மனிதர் கண்களுக்குப் பொதுவாக எல்லா இன்ஷுயரன்ஸ் பாலிஸிகளும் ஒரே மாதிரியாகத் தோன்றலாம். ஆனால், பகுத்தறிவும் அழகின் தரமும் தெரிந்தவர், உடை யெவ்வாறு தைக்கப் பட்டிருக்கின்ற தென்பதையும், அது நெடுங்காலமாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கிற தையற்காரர் இடத்திலிருந்து வருகிறதா வென்பதையுங் கவனிப்பார்கள். 'நாஷனல்' பாலிஸிக்கு இந்தச் சிறப்பு முத்திரை யிருக்கிறது. கல்கத்தாவில் ஹெட் ஆபீஸ் உடைய

**நாஷனல் இன்ஷுயரன்ஸ் கம்பெனி லிமிடட்**

கொடுக்கின்ற ஒவ்வொரு பாலிஸிக்கும் முப்பது வருடத்திய திறமை வாய்ந்த இன்ஷுயரன்ஸ் காரியானுபவம் ஆதாரமா யிருக்கிறது.

அஸ்ஸெட்ஸ் $2\frac{1}{2}$ கோடிக்கு மேல்
நடைமுதல் பிஸினஸ் 10 கோடிக்கு மேல்

ஏஜென்ஸி எடுத்துக்கொள்ள விரும்புகின்றவர் கீழ்க்காணும் விலாஸங்களுக்கு எழுதவும்.

ப்ரான்ச் ஸெக்ரடரி, நாஷனல் இன்ஷுயரன்ஸ் பில்டிங், 362. சைனாபஜார் தெரு, சென்னை.

ஆர்கனைஸிங் ஆபீஸ், ஸப் ஆபீஸ், 171. ந்யூ ஸ்ட்ரீட், மதுரை.

சீப் ஏஜன்ஸி, ஆர்காட் ஸ்ரீனிவாசார் தெரு, பெங்களூர் ஸிடி.

நெருப்பு மோட்டார் விபத்துக்கள்,

அஸ்ஸொஸ்ஸியேடெட் நாஷனல் பையர் அண்ட் ஜனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பனியால் (லிமிடெட்) இன்ஷ்யூர் செய்யப்படும்.

**இண்டோ-கம்மர்ஷியல்**

**பாங்க், லிமிடெட்.**

**மாயவரம்**

சென்னை ஆபீஸ், 107. அரண்மனைக்காரத் தெரு,
பஜார் பிராஞ்சு, 260. சைனாபஜார் ரோட்,
மதுரை, காரைக்குடி, விருதுநகர்,
கும்பகோணம், திருவாரூர்,
ஈரோடு, தூத்துக்குடி,
விஜயநகரம்,
புதுக்கோட்டை,
திருநெல்வேலி.
சப்-ஆபீஸ்
சீர்காழி & சிதம்பரம்

எல்லா வகையான பாங்கி அலுவல்களும் ஏற்றுக்கொள்ளப்படும். நிபந்தனைகள் எழுதித் தெரிந்துகொள்ளலாம்.

S. N. N. சங்கரலிங்க அய்யர்,
மானேஜிங் டைரக்டர்,
107. அரண்மனைக்கார தெரு, ஜி, டி. மதராஸ்.

**சிறந்த பலவிருத்தி ஔஷதம்**

சென்ற 53 வருஷங்களாகப் பேரும் புகழும் பெற்று உலாவி வருகின்றன.

**ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்**

மலச்சிக்கல், தேகஅசதி நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகக் குறைவு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும்.

**32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு விலை ரூ. 1**

**இனும்! "காம சாஸ்திரம்" இனும்!!**

**ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,**
**26 பிராட்வே, மதராஸ்.**

பல போலிகள் இருப்பதால் நம் பிக்கையடைய நேரில் எழுதுக.

**இஞ்சிப்**
**அஜீர்ண பித்த சமனம்**

ரூ. ஒன்று அனுப்பி 12 பாக்கெட்கள் நஞ்சன்கூடு பல் பொடி வீட்டில் பெறுக.



**நஞ்சன்கூடு பல்பொடி**

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

Printed at the B. N. Press Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)